சத்திய வேத

பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | *1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது* | Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு மாசிமாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 8-ம் இலக்கம்

பாருலகு கண்கண்ட பரிசுத்த தந்தை

பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் வாழ்க!

வருகிற பங்குனிமாதம் 2-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பரிசுத்த பாப்பரசரது 82-வது பிறந்ததினமும், பதினோராம் பத்திநாத பாப்பானவரிடமாக சம்பேதுருவானவரின் சிம்மாசனத்துக்குத் தெரிவுசெய்யப்பெற்ற 19-ம் ஆண்டு நிறைவு தினமுமாகும்.

ஆயர் எங்கள் அரசர் வாழ்க!

மாண்புமிகு விர்ஜினியா மாதாதந்த
மணிவிளக்கு வத்திக்கான் மலர்ந்தசெல்வம்
ஆண்டகைநல் லறத்தினுரு அருளின்கோயில்
அன்பெனும்பொற் கடலகத்து விளைந்தமுத்தம்
நீண்டபுகழ் ஞானகலை நிறைந்தசெம்மல்
நிகரற்ற சாந்திமழை பொழியும்மேகம்
ஆண்டுபல ஆண்டுகளா யகிலம்போற்றும்
ஆயர்குலக் கொழுந்தாம்பாப் பரசர்வாழ்க!

"ஜெயம்"

இந்த மங்கை யார்?

ஊதா வர்ண இரகசியம் யாது?

மதலேனுள் ஓர் பிரசித்தபாவியாய் இருந்த காலத்திலே அவளது சீவியசரித்திரத்தைச் சித்திரித்துக்காட்டுவதான சிவப்பு வர்ண உடையைப்பற்றி இதற்கு முன் எடுத்துக்காட்டப்பட்டது. கிறீஸ்துநாதரையே தனது பக்கமாக வெற்றிகொண்டுவிட வேண்டுமென்று ஆடையாபரணங்களாலே தன்னை அலங்கரித்துச்சென்ற மதலேனுளை அத்திவ்வியபெருமான் தமதுஒரேயொரு திருநோக்கால் எவ்வாறு தம்பக்கமாக வெற்றிகொண்டாரென்பதை இனிப்படித்தறிக. நீதிமான்களையல்ல, பாவிகளையே அழைக்கவந்த பரமன் — தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்தில்விட்டுக் காணமற்போன ஆட்டைக் காணுந்தனையுந்தேடிக் கண்டுபிடித்தபிறகு களிகூரும் நல்லஆயன் — ஊதாரிப்பிள்ளை இன்னும் தூரத்தில்வரும்போதே அவனைக்கண்டு மனதுருகி ஓடிச்சென்று அவன்கழுத்தில் தாவி விழுந்து அவனை முத்தமிட்டு ஆனந்தங் கொண்டாடும் நல்ல தகப்பன் — மதலேனுள் கண் காணத்தக்கதாக நயீம்பட்டணத்துவிதவைமேல் மனமிரங்கி இறந்துபோன அவளுடைய ஏககுமாரனுக்கு ஆருயிரும், ஆரோக்கியமும் கொடுத்து அவனைத் தாயிடம்ஒப்புவிக்கின்றார். அதுமுதல் அன்று பகல்முழுவதும் எல்லோர்மட்டிலும் — துன்புகஸ்தியாலே சோபித்து வருந்துவோரான எவ்வெவர்மட்டிலும் அவர் எத்துணைபெரும் அன்பும், தயையும், அணைகடந்த இரக்கமும் உடையாரென்பதை அவள் கண்டுணரும்படியாகப் பிரத்தியட்சமாய்க் காண்பிக்கின்றார். கடைசியாய், பாவிகளைத் தேடி வந்த அவ்விரட்சாமூர்த்தி அன்று தமது கடினஉழைப்பின் மத்தியில் — களைப்பின்மத்தியில் ஓர்தரம் அவள் பக்கமாகவும் திரும்புகின்றார். மிகுந்தகருணையுடன் அவளை நோக்குகின்றார். நிகழ்ந்தது அம்மட்டுமே.

அக்ஷணமுதல் அவள்வாழ்க்கையிலே ஓர்பெரும் மாறுதல்ஏற்படுகிறது. அதாவது, அவளுடைய சீவியசரித்திரத்தைச் சித்திரித்துக்காட்டும் மூவர்ணஆடைகளில் இரண்டாவதான ஊதா வஸ்திரம்குறிக்கும் பச்சாத்தாப தபவாழ்க்கை ஆரம்பமாகின்றது. இரட்சகரின் அந்தஇரக்கமான உருக்கம்நிறைந்த பார்வையானது, கார்மேகங்களைக் கலையச் செய்யும் ஓர்மின்னலைப்போன்று மதலேனுளின் உள்ளத்தைத் திடீரென ஊடுருவிப்பாய்கின்றது. அவளது இதயக்கடலிலே அது பெருந்துயர அலைகளை எழுப்புகின்றது. அந்த அலைகளின் எழுச்சியை அவளது கண்ணீர்த்திவலை புலப்படுத்துகின்றது. யேசுவின் அந்த இரக்க

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

ஆயுள் நீழ்க!

நந்தாத வொளிபடைத்த நமதுயேசு
நாதரது ஞானவுட லதிலே·தூய
எந்தாதை பாப்பரசர் தலையாய்நின்று
ஏற்றமிகு மலைமணியாய் இலங்காநிற்குஞ்
சிந்தாத திருமறையின் மக்களந்தத்
திருநாதர் அவயவங்க ளென்னக்கொண்டு
அந்தாதி யுலகமெலா மன்பாலாளும்
அரியதிருப் பாப்பரசர் ஆயுள்நீழ்க!

— "யுவன்"

சந்தப் பாப்பானவர் தம்மை எம்தேவனே காத்தாளுவீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்சுடரே! உன்னருளின் வரமீந்தாள்வாய்

—: "மரிதாசன்" :—

கல்லுமலைக் குகையினிலே வறியோன்போலக்
கடுங்குளிரி லொடுங்கியுடல் நடுங்கக்கண்டும்
புல்லணையிற் சோதிபொழி பொன்னார்மேனி
போர்த்திருந்த கந்தையுடைக் கோலங்கண்டும்
மல்லிகைப்புன் னகைசொரியும் மலர்வாய்பூத்து
"மகனேவா" என்றழுத வருத்தங்கண்டும்
வல்லிரும்பு நெஞ்சிளகாக் கொடியோனென்னை
வான்சுடரே! உன்னருளின் வரமீந்தாள்வாய்.

●

பூவனத்தி லேதனியே கலங்கக்கண்டும்
பொல்லாத யூதர்குழு "இவனோர்கள்வன்
தேவனெனச் சொல்லுகிறான் கொல்வோம்" என்று
திருமுகத்திற் காறியுமிழ்ந் திடுதல்கண்டும்
ஆவிதனைப் பறிப்பதற்கு "பரபாஸ்"என்ற
அற்பனினும் அற்பனெனக் கணிக்கக்கண்டும்
கூவியழ மனமில்லாக் கொடியோனென்னைக்
குளிர்சுடரே! உன்னருளின் வரமீந்தாள்வாய்.

●

பங்கிருந்து அமுதேற்ற அன்பர்நீங்கப்
பலியாகத் துணையின்றி யேகக்கண்டும்
"திங்கள்முக மகனெங்கே? எங்கே"யென்று
தெருவெல்லாந் தாய்தேடி யலறக்கண்டும்
தங்கவுடல் மூடியசெவ் வங்கிக்காகத்
தயவின்றிக் கொலையூதர் உரியக்கண்டும்
பொங்கியழு துருகாத புலையேன்என்னைப்
பொற்சுடரே உன்னருளின் வரமீந்தாள்வாய்.

●

சூட்டியவோர் முண்முடியால் உதிரம்பீறிச்
சொரிந்துடலஞ் சோரியிலே முழுகக்கண்டும்
நீட்டியிருப் பாணிகளால் உடலைத்தைத்து
நீள்கிடங்கிற் சிலுவையொடு நிறுத்தக்கண்டும்
வாட்டுகின்ற "தாகவிடாய்" என்றேநோக
வஞ்சகர்கள் காடியினை யருத்தக்கண்டும்
ஈட்டிதனை யேற்றிடவும் இரங்காதோனை
இருஞ்சுடரே! உன்னருளின் வரமீந்தாள்வாய்.

புற்றுநோய் இன்று விஷநோயாக மாறியுள்ளது

நவநாகரிக வாழ்க்கையே அதன் வளர்ச்சிக்கு மூலகாரணமாகும்

டக்றர் எல். எவ். ஜே. ஜெரினர் அவர்கள்தரும் விளக்கம்

முதியவர்களுக்கே உரித்தானது எனக் கருதப்பட்டபுற்றுநோய் இப்போது பலரையும்பாதிக்கவல்ல விஷநோயாக மாறியுள்ளதுஎன்று யாழ்ப்பாண 'ரோட்டரி'சபையின் மகாநாட்டில் பேசிய யாழ்ப்பாண அரசினர்ஆஸ்பத்திரி சேர்ஜன் டக்றர் எல். எவ். ஜே. ஜெரினர்அவர்கள் கூறினார். மேலும் அவர்பேசுகையில், நவநாகரிகமே புற்றுநோய்வளர்ச்சிக் குப் பெரிதும்காரணமாயுள்ளது. நவநாகரிகத்தின் நன்கொடையாகவிளங்கும் புகையிலைப் பாவனை இதற்கு வித்திடுகிறது. இயற்கைச்சத்தில் நம்பிக்கையற்ற நாகரிக மனிதர்கள் செயற்கைச்சத்தில் உடல் நலத்தைப்பெருக்க நாட்டம்கொண்டுள்ளனர். இக்கொள்கையும் புற்றுநோய் அபிவிருத்தியடையப் பெரிதும் உதவி செய்கிறது. புதுமாதிரியான செயற்கை உணவுப்பொருட்களை மனிதன் எவ்வளவு விரும்புகிறானோ, அவ்வளவுதூரம் புற்றுநோயையும் வருந்தியழைக்கிறானென்றால் மிகையாகாது. செயற்கை உணவுப்பொருட்கள் மனித சரீரத்தில் எவ்வளவு அதிகமாக இடம்பெறுகிறதோ அவ்வளவும் புற்றுநோய் வளர்ச்சிபெறுவதற்குக் காரணமாகும். இதனால்தான், நவநாகரிகம் புற்றுநோய் அதிகரிக்க வழிசெய்கிறது.

புற்றுநோய் வளர்ச்சிபெறுதற்கான சிலசிவசத்துகள் புதுமாதிரியான உணவுப்பொருட்களில் இயற்கையாகவே இடம்பெற்றுள்ளன. உதாரணமாக, அவுஸ்திரேலிய வெண்ணெய் மிகக்கவர்ச்சியாகத் தோற்றமளிக்கிறது. இது மஞ்சள்நிறமான அழகியதோற்றத்தைப் பெறுவதற்காகவே உற்பத்தியாளர்கள் சிலரசாயனபொருட்களை வெண்ணெயில் சேர்க்கின்றனர். ஆகவே, அது எவரும் விரும்பிவாங்கக்கூடிய அளவுக்குக் கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கிறது. இத்தோற்றத்தைப் பெறுவதற்காக உபயோகிக்கப்படும் வர்ணரசாயன பொருட்களில்தான் புற்றுநோய்வளர்ச்சிக்குக் காரணமான விஷச்சத்து அடங்கியுள்ளது. மாஜரிவெண்ணெய், சொக்களேட், டப்பாக்களில் அடைக்கப்பட்ட தக்காளிப்பழங்களின் இரத்த நிறதோற்றம்ஆகிய இவைகள் யாவற்றிலும் புற்றுநோய் அதிகரிப்புக்கான மூலப்பொருட்கள் அடங்கியுள்ளன. இவைகளைத் தினந்தோறும் நாகரிக மக்கள் உட்கொள்ளுகின்றனர். அத்துடன் புற்றுநோய்பெருகவும் வழிசெய்கின்றனர்.

ஆண்களில் 63சதவீதமும், பெண்களில் 72சதவீதமும் மலச்சிக்கல்காரணமாகப் புற்றுநோய்க்குப் பலியாகியுள்ளாரென அறிவித்தார். அடிக்கடி பேதிமருந்து உட்கொள்ளுவது, கூடுமானவகையில் காய்கறிவகைகளைப் பச்சையாக உட்கொள்ளுவது, புகைபிடிக்காதிருப்பது நாகரிகஉணவுப்பொருட்கள்மீது அதிகசிரத்தை யில்லாதிருப்பதுஆகியவை புற்றுநோய்த்தடுப்புக்குப் பெரிதும்உதவிசெய்யுமென்றும் அவர் தெரிவித்தார்.

TUITION
IN
Shorthand-Typewriting and Music

Shorthand: Pitman's Phonetic System } Theoretical course and
Typewriting: Vertical Touch Method } Advanced Level

Students (boys and girls) prepared for Pitman's London, London Chamber of Commerce and other Examinations.

Shorthand Speed Training a Speciality

Several students already trained are in Govt. Service, Business Firms and other Institutions in Ceylon and India.

Church Music: English and Plain-Chant (Gregorian)

Individual attention paid to each student.

JOSEPH ANDREW,
"De Mazenod", 4th Cross Street, Jaffna.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1964

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

1. யாழ்ப்பாணம், தற்பொழுது ஜயிலையிலிருக்கும் விக்ரர் மாட்டினும்,
2. பெண் மேரிதிரேசாவும்.

—வழக்காளிகள்.

எதிராக

1. ஆரியகுளத்தடி ஐயன் முருகன் (இவர் காலம்சென்றுபோன ஐயன் முருகன் பெண் செல்லம்மாவின் உரிமைத் தத்திவகாரன்)
ஆரியகுளத்தடி
2. நீலன் பொன்னனும்,
3. பெண் வள்ளியும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1964-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1958-ம்ஆண்டு சித்திரைமாதம் 5-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 802-50உம், 2-12-57தொடக்கம் 21-1-58வரைக்கும் ரூபா 500-க்குப் 12% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார் பண்ணை கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை, "பீக்குளங்கரையும். பீக்குளம்தலைமடையும்" கெ. பர. ஒன்றும் (1), பயிர் வகைகளும். எல்லை: கிழக்கு — வீரகத்திப்பிள்ளையார்கோவில் ஆதனம். வடக்கு — பூதன் வேலனுக்குரிய ஆதனம். மேற்கும், தெற்கும் — ஆறுமுகம் பெண் அமிர்தம்மாவக்குரிய ஆதனம். இதடங்கலும். வடக்கெல்லைக் காணிக்குள்இருக்கும் கிணற்றில்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், இன்னும் ஒழுங்கைக்குப் போக்குவரவுசெய்யும் உரித்தும், ஒழுங்கைஉரித்தும்.

தி. ந. ஆசீர்வாதம்,
கொம்மிஷனர்

நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
22-2-1958

நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

அர்ச். சதாசகாயமாதாவின் மன்றாட்டினால் எனக்கு நல்லசுகம் கிடைத்தது. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

Mrs. M. M. S.

* * *

எனது மகள் 5வருடகாலம் வாதநோயினால் பீடிக்கப்பட்டிருந்தாள். பல வைத்தியம்செய்தும் சுகம்கிடைக்கவில்லை. கடைசியாக அர்ச். நீத்தம்மாளிடம் மகளை ஒப்புக்கொடுத்து, பூரண சுகம் கிடைக்கும்படி மன்றாடிவந்தேன். பூரண சுகம்கிடைத்துவிட்டது. அர்ச். நீத்தம்மாளின் புகழ்யாவருமறிய நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

Mrs. மனுவேல்

உடுவலைதோட்டம், கண்டி.

மரண அறிக்கை

புங்குடுதீவு, கிழக்குவாசரும், அர்ச். சவேரியார்கோவிலுக்குச் சேர்ந்தவருமான திரு. சவிரி அலேஸ் அவர்களின் மனைவி திருமதி அலேஸ் திரேசியா என்பவ சென்ற இரண்டுவாரங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து அந்தியதேவ திரவிய அனுமானங்களை நல்லறிவுடன் பெற்று இம்மாதம் 9-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை தனது 85-ம் வயதில் காலஞ்செல்லலாயினர். இவவுக்கு 8பிள்ளைகளும், 39பேரப்பிள்ளைகளும், 12பேட்டப்பிள்ளைகளும் சீவந்தராய் உள்ளனர்.

இவவின் பிரேதமானது மறுநாள் இனசனர், சிநேகிதர் சகிதமாக அர்ச். சவேரியார்கோவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவவின் ஆன்மசாந்திக்காக யாழ்ப்பாணம், ஆசனக்கோவிலில் ஓர் துக்கப் பூசைநடந்தேறும். இவவைஇழந்து துன்புறும், பத்தா, பிள்ளைகள் மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

R. I. P.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 1488

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

சுதுமலை தெற்கு
1. சரவணமுத்து பொன்னம்பலமும்,
2. பெண் சரஸ்வதியும்

— வழக்காளிகள்.

எதிராக

வண்ணார்பண்ணை பலாலிரோட் இல. 20.
1. கணபதி நல்லதம்பியும்,
2. பெண் வள்ளிப்பிள்ளையும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1488-ம் இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக் காணி 1958-ம்ஆண்டு பங்குனிமாதம் 27-ந்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,210-37சதம். இன்னும்ரூபா 2,500-க்குப் 12-2-57தொடக்கம், 4-4-57வரையும் 11%வட்டியும், பின்கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100க்கு 5%வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 244-02 சதமும். இதில் ரூபா 125|- நீக்கி.

காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று வண்ணார் பண்ணை கிழக்கிறை காக்கையினன் வளவு நி. ப. $2\frac{1}{2}$. ஆனால், உலாந்த மேஸ்தர் எம். அலோஷியஸ் என்பவரால் 1947-ம்ஆண்டு தைமாதம் 25-ந்திகதி விஸ்தரிக்சப்பட்ட 1252-ம் இலக்க பிளானின்படி ப. நி. இ. 2 குளி $5\frac{1}{2}$யும், வீடும் கக்கூசும் புதிதாக வெட்டப்பட்ட கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு— தம்புநடராசாவின் ஆதனம். வடக்கு— நாவலர்வீதி. மேற்கு— அன்னசத்திரத்திற்குரிய தருமஆதனம். தெற்கு— முருகர் வல்லிபுரத்தின் ஆதனம். இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம், 24-2-1958

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நேச மகனே!

தேவாதி தேவன் துன்பங்களைச் சுமந்த நாட்களின் நினைவை உனக்கு ஊட்டுவதற்காக இதனை எழுதுகிறேன்.
ஊன்றிப்படி; உற்றுணர்; துன்பங்களைச் சகிக்சப் பழகு.

என்நேச மகனே!

தேவன் உன்னை மீட்பதற்காகப் பரலோகத்தில் நின்று இறங்கினர். உனது அக்கிரமங்களைத் தம்மேற் சுமந்தார். எதற்காக? நீ பொறுமையைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக; உலக துயர்களை முறைப்பாடின்றிச் சகித்துக்கொள்ளவேண்டு மென்பதற்காக. கரைகடந்த இந்த நேசப்பெருக்கை வேறெங்காவது நீ கண்டதுண்டா?

பிறந்ததுமுதல் மரிக்கும்வரை தேவனுக்குத் துன்பம் தொடர்ந்தே வந்தது. உலக சொத்துக்களில் அவர் வறுமைப்பட்டார். முறைப்பாடுகளும், அவமானங்களும், நிந்தைகளும் சகித்தார். உபகாரங்களுக்கு நன்றியறியாமையைப் பரிசாகப் பெற்ருர். தூய போதகங்களுக்குப் பதிலாய்த் தூஷணைகளையேற்றுக் கொண்டார். "கஸ்தியின் மனிதனுகிய" தேவன் "மரணமட்டும் என்ஆத்துமம் கஸ்தியாயிருக்கின்றது" என்று திருவாய் மலர்ந்த போதே நமது சீவியத்தின் துயரெல்லாம் அகன்றுவிட்டதே.

மகனே! "அழுகிறவர்கள் பாக்கியவான்கள்." கண்ணீரில் உண்டாகும் மகிழ்ச்சியைக் காணப் பழகு. நாம் தண்டிக்கப்படுகிருேம் என்பது உண்மை. அதற்காகத் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ள எண்ணுதே. இரத்தஞ் சிந்தும்வரை போராடவேண்டிய வனுகிய நீ இப்போதே பின்னடையாதே. உன்னுடைய அற்ப துன்பங்களை இலகுவாக்கிக் கொள்ள, பிறர் அநுபவிக்கும் பெருந் துன்பங்களை நினைவுகூர மறவாதே. பொறுமைக்குக் குறிக்கப்பட்ட பொன்முடியைப் போராடாமல் பெற முடியாது மகனே.

"மயிர் கத்தரிக்கிறவன்முன் செம்மறியாட்டுக் குட்டியைப் போல மௌனமாய் இருந்தார்" என்று யேசுநாதரின் பாடுகளைப் பற்றித் தீர்க்கதரிசிஒருவர் கூறின வார்த்தைகளை உன் இருதயத்தில் எழுதிக்கொள். அடிக்கடி அவற்றைப் படி. வாய் திறவாது மௌனமாய் இருந்து கரையில்லாத் துன்பத்தைப் பொறுத்த தேவனைப் பார்த்தபின்பும் பொறுமையைக் கைவிடலாமா?

"பொறுமையுள்ளவன் பலமுள்ளவனைவிட உத்தமன். தன் ஆத்துமத்தை அடக்கி ஆளுகிறவன் பட்டணங்களைச் செயித்துப் பிடிக்கிறவனைவிட மேலானவன்" என்னும் மணிமொழி உனக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகச் சுடர் தருவதாக!

உன் அன்பு மறவாத
அப்பா.

இசைச் சம்மேளனம் பூசையைப்பற்றி வற்புறுத்துகிறது

திருவழிபாட்டில் ஆடம்பரப் பூசையும், அவ்வேளை பாடப்பெறும் சங்கீதமும் மற்றுந் திருச்சடங்குகளுக்கு ஓர் தரமாயிருக்க வேண்டுமெனப் பரீசில் கூடிய சர்வசன திரு இசை மாநாடு வற்புறுத்தியிருக்கிறது.

இம்மாநாடு செய்த பலசிபாரிசுகளில் திருச்சபைச் சங்கீதத்தில் சபையார் (கோவிலில் கூடியிருப்பவர்எல்லோரும்) பங்கெடுத்துக் கொள்ளப் பயிற்றுவது மிகமிக விரும்பத்தக்க தென்பதும் ஒன்ருகும். இச்சிபாரிசுகள் பரிசுத்த பிதா எழுதிய "திருஇசைமுறை" எனும் சுற்றுநிருபத்தை யொட்டியவையாகும்.

திருச்சபைச் சங்கீதம் "திருவழிபாட்டின்சிறந்தகலை" எனக்கூறி, அதை உபயோகிக்கும் விதத்தையும், புதிதாய்ஆக்கும் முறையையும்பற்றிப்பேசுகிறது. "பல்லிசைப்பண்" முறையைக் குறைகூருது "கிறகோரியார் இசை முறை" கோவிற்சங்கீதத்திற்குகந்தது எனக்கூறுகிறது மாநாடு. பாடகருக்குப் பயிற்றுவதில் இலகுவான இராகங்களைத் தேடாது "கலைவளர்க்கும் நோக்குடன்" திருஇசை ஆக்கப்படவேண்டும். மேலைச்சபைச் சங்கீதக்கலாசாலைகள் கீழைரீதிச் சங்கீதமும் படிப்பிக்க வேண்டும்.

சபையார்

திருவழிபாட்டில் சபையார்க்குரியபகுதி நிலைத்தேயாகவேண்டும். திருவழிபாட்டைச்சாராத தேவநற்கருணை ஆசீர் வழங்கல் போன்ற சடங்குகளில் தேசிய மொழியிலும் இசையிலும்சேர்ந்த கீதங்களை உபயோகித்துச் சபையார் பங்குபெறச் செய்யலாம்.

கோவிற்சங்கீதசபைகள் இன்னும் ஏற்படாதநாடுகளில் அவைகளை ஞானமேய்ப்பரின் ஆதரவுடன் ஏற்படுத்தவும், ஆராதனைக்குரிய சுதேசமெட்டுகளை ஆக்குவதற்கு உதவிபுரியவும், இச்சங்கங்கள் சர்வதேசசங்கமாய் அமைய வேண்டுமெனவும் சிபாரிசு செய்யப்பட்டது.

சுதேசசங்கீதமுறைகள் கிறீஸ்துவஆராதனைக்கேற்க அமைக்கப் பெறவேண்டுமெனக் கூறியதும் கவனிக்கற்பாலது.

எமது திடனின் உற்பத்தி ஸ்தானம்

— A. W. J. சந்திரசேகரா —

தேவநற்கருணை ஸ்தாபிக்கப்பட்டதையெண்ணித் தான் ஆச்சரியப்பட்டதாக ஒருசமயம் அர்ச். அகுஸ்தினர் கூறினர். கடவுளின் சிருஷ்டிப்பில் அழகான கொடைகள் அநேகம் உண்டு. ஆனல், தேவநற்கருணை சாதாரண மனிதர் கண்களுக்கு ஒரு புரியாத புதிராகவே படும். உண்மையில் பரலோக பாதையில் களைப்பின்றிப் பிரயாணம் செய்வதற்கு நற்கருணை புஷ்டி நிறைந்த ஆகாரமாகும்.

வழிதவறி வனத்தில் அகப்பட்டுக் கொண்ட ஒருதாயைப்பற்றிய கதை இருப்பது உங்களுக்குத் தெரியுமா? அந்தத்தாய்க்கு ஒருகுழந்தை. வனத்தில் தாயுடன் அகப்பட்டுக்கொண்ட குழந்தை பசியால் துடிதுடித்தது. தாய்பார்த்தாள், ஆகாரம்கிடைப்பது முயற்கொம்பாயிருந்தது; உடனே ஓர்கூரியதடியால் தனது புசத்தில் இரணம் உண்டாக்கி அதைத் தனது குழந்தையின்வாயில் திணித்தாள். காயத்தால்வந்தஇரத்தம் குழந்தையின் பசியைப்போக்கியது; அத்துடன் தாயின் உயிரையும் போக்கியது.

இந்தக்கதை உங்கள் உள்ளத்தைத் தொடவில்லையா? நிச்சயமாக உங்கள் உள்ளத்தை உருக்கியிருக்கும். இது இப்படியென்ருல், "நாளாந்தம்வந்து என் மாமிசத்தையும், இரத்தத்தையும் உட்கொண்டு செல்லுங்கள்" என்று அன்புடன் அழைக்கும் கிறீஸ்துநாதரின்கதை எப்படியிருக்கும்!

உணவு இல்லாமல் ஒருமனிதன் அதிககாலம் வாழமுடியாது. என வேதான் நித்தியசீவியத்தை அடைவதற்கும்,நமதுயாத்திரைதொடர்ந்து நடைபெறுவதற்கும் கிறீஸ்துவின் மாமிசமும், இரத்தமும் அவசியம் இல்லாவிட்டால் நாம் வாழமாட்டோம் என்று அவரே கூறியிருக்கிருர்.

நாம் பரித்தியாகங்கள் செய்ய வேண்டுமல்லவா? தங்கள் மார்க்கத்துக்காக எத்தனையாயிரம்கிறீஸ்தவர்கள் வேதசாட்சிகளாகி யிருக்கிருர்கள். இப்போதும் வேத சாட்சிகளாகிருர்கள். எத்தனைபேர் அர்ச்சியசிட்டர்களாகிருர்கள் எத்தனையோ மிஷனரிமார் சமயத்தின் பொருட்டுத் தங்கள் மதுரமான வீடுகளையும், தேசங்களையும், பெற்ருேர்—உறவினரையும் பிரிந்து, தூர தேசம் போகிருர்கள். அவர்களது சேவைதான் எத்துணை பெரிதானது!

இதற்கெல்லாம் தேவையான மனத்திடனையும், விடாமுயற்சியையும் அளிப்பது திவ்விய நற்கருணை என்று சொன்ருல் அதில் ஒருவித தவறுமில்லை.

இஸ்ராயேலரின் சரித்திரத்தில் எலியாஸ் தீர்க்கதரிசி ஒருமகத்தான இடத்தைப் பெற்றிருக்கிருர். ஜெசபெல் இராணி அவரைக் கொல்லுவதற்குப் போர்வீரரை ஏவிவிட்டசமயம் அவர் இரவோடிரவாகத் தப்பியோடவேண்டியிருந்தது. ஆனல்,

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

மதி மொழிகள்

செல்வம் நிலைத்திருக்க வேண்டுமா?

- ஏழைகள் கண்களிலிருந்து நீர் வரவொட்டாமல் நடந்துகொள்.
- பிறருடைய பொருள் உனக்கு வரவேண்டுமென்று கனவிலும் கருதாதே.
- நியாயம் அல்லாத வழியில் பொருளைச் சேர்க்காதே.

குடும்பம் ஒருதருவைப் போன்றது

- அதற்கு வேர் மனைவி;
- அடிமரம் கணவன்;
- கிளைகள் மக்கள்;
- இலைகள் அன்பு;
- மலர்கள் கருணை;
- பழங்கள் தருமம்.

எது சிறந்தது

- யாசித்து நெய்யும், பாலும், தயிரும்சேர்ந்த சிறந்த அன்னத்தை உண்பதைவிட, உழைத்து உண்ணும் தண்ணீரும், சோறும் சிறந்தது.
- வீரமும், புகழுமில்லாமல் மங்கி நெடுங்காலம் இருப்பதைவிட, வீரமும், புகழும்பெற்றுச் சிறிது காலம்வாழ்வது சிறந்தது.

நல்லவை செய்

- நல்லஉணவு உண்பதினுல் உனதுஉடல் வளரும்
- நல்ல நூல்களைப் படிப்பதினுல் உனது உணர்ச்சி வளரும்.
- நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை நினைப்பதினுல் உனது ஆன்மா வளரும்.

நன்மைசெய் நன்மைவளரும்

- கம்பையை விதைத்துவிட்டுக் கோதுமையை எதிர்பாராதே.
- கருவேலைநட்டுச் சந்தனத்தைப் பெறமுடியாது.

தேடிக்கொள்

- இராக்காலத்திற்கு வேண்டியதைப் பகலில் தேடிக்கொள்.
- மழைகாலத்திற்கு வேண்டியதை மற்றைக்காலத்தில் தேடிக்கொள்.
- முதுமைக்கு வேண்டியதை இளமையிற் தேடிக்கொள்.
- மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக்கொள்.

அணிகலம் (ஆபரணம்)

- கண்ணுக்கு அணிகலம் கண்ணேட்டம் (தாட்சணியம்)
- காதுக்கு அணிகலம் நல்ல கேள்வி.
- வாக்குக்கு அணிகலம் சத்தியம்.
- கரத்திற்கு அணிகலம் தான தருமம்.
- மனத்திற்கு அணிகலம் தியானம்.

தொகுப்பு: "சாந்தி"

தென் துருவத்தில் ஐ. நா. கொடி ஆசீர்வதிக்கப் பட்டது

தற்பொழுது தென்துருவத்திற் பறக்கும் ஐ. நா. கொடியைஏற்றுமுன் வண. லேயோன் டர்கோ விஸ்கிசுவாமியார் அதை ஆசீர்வதித்தார்என "டெய்லிமெயில்" பத்திரிகையின் நிருபர் நோயெல் பார்பர் அறிவித்திருக்கிருர்.

இக்கொடியேற்றத்தின் கருத்தைச் சுவாமிகள் சுட்டிப்பேசினர். அதாவது, "ஐ. நா. அதிகாரம் உலகமெங்கும் பரந்திருக்கிறது. உலகசமாதானத்திற்கும் ஒற்றுமைக்கும் சின்னமாய் விளங்கும் இக்கொடி பாரெங்கும் தனது கருத்தைப் பரப்பக்கூடிய நிலையிலே நாம் இதைப் பறக்க விடுகிருேம்."

தென்துருவ ஆராய்ச்சிக்குச் சென்றிருக்கும் அமெரிக்ககடற் படைக்கு விசாரணைக்குரவராக டர்கோ விஸ்கிசுவாமிகள் நியமனம் பெற்றிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி மாதம்

பொதுக்கருத்து: கிறீஸ்துநாதருக்காகத் துன்புறும் அனைவருக்கும் லூர்துகெபியின் பரிசுத்தகன்னிகை ஆறுதலும், திடமும் அளிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து: சீனர்களின் சமய உணர்ச்சியை நாஸ்திகலோகாதயம் அழியாதிருக்கும்படியாக மன்ருடிக்கொள்வது.

சத்திய வேத

பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
மாசிமாதம் 27-ந் திகதி

இது உவப்பான காலம்; ஏனெனில், இன்று இரட்சணியத்தின் நாள்!

தபசுகாலத்தின் நோக்கத்தையும் தூய்மையையும் நன்கு விளங்கிக்கொள்வதற்கும், அதைநன்கு அனுசரிப்பதற்கும் யேசுநாதருடன் நாமும் வனந்தரத்துக்குப் போயிருந்ததாகக் கற்பனை செய்து கொள்வது அவசியம். யேசுநாதர் நாற்பதுநாள் இரவும் பகலும் கடுந்தபசுசெய்து கொண்டிருந்த வேளையில் நாம் அங்கிருந்தால் எவற்றைக் கண்டிருப்போம்? அவர் மிகுந்த அடக்க ஒடுக்கத்துடனும், தாழ்மையுடனும், மௌனத்துடனும் அங்கு நிற்பதைப் பார்த்திருப்போம். உண்ணமலும், உறங்காமலும், தலைசாய்க்க இடமின்றி அலைவதைக் கண்டிருப்போம். வனந்தரத்தின் கொடிய வெய்யிலிற் காய்ந்து புழுங்குவதையும், இரவிற் பனியின் கோரத்தால் நடுங்குவதையுங் கண்டிருப்போம். தமது நித்திய பிதாவின் சமுகத்தில் அவர் சாஷ்டாங்கமாக விழுந்து கிடப்பதைக் கண்டிருப்போம். பலமுறை குனிந்த தலையுடன் முழங்கால் மடித்துத் தியானத்தில் இருந்ததைப்பார்த்திருப்போம். அவர் பலமுறை கண்ணீர் சொரிந்தழுததைக் கண்டிருப்போம். அடிக்கடி தேவசுதன் நித்திய பிதாவை வாழ்த்திப் போற்றிப் புகழ்வதையும், நன்றித்துதிகள் கூறுவதையும், பாவிகளான மனுமக்களுக்காகப் பொறுத்தல் இரந்து வேண்டுவதையும் நம் காதுகளாற் கேட்டிருப்போம்.

ஒரு குற்றமும் அறியாத பரிசுத்தர் எதற்காக இக்கடினதபசு செய்கிருர்? காரணமுண்டு. மக்களுக்குப் போதனையால் மட்டுமன்றிச் சாதனையாலும் படிப்பிக்கத் தேவன் சித்தமானுர்.

அமைதியும் மௌனமும் தியானத்துக்கு இன்றியமையாதவை என்பதை எங்களுக்குப் படிப்பிக்க, அமைதி நிலவிய வனந்தரத்தில் மௌனத்தை மேற்கொண்டு தியானத்தில் இருந்தார் தேவசுதன். தேவனுடன் பேசுவதற்கும் தேவன் சொல்வதைக் கேட்பதற்கும் தியானம் இன்றியமையாதது. தியானிப்பதால் நல்ல ஆத்தும சோதனை செய்து எங்கள் குற்றங்களைக் கண்டறிந்து அவற்றைத் திருத்த வழிவகைகளைக் கையாட முடியும்.

எங்களுக்குச் செபத்தின் அவசியத்தைப் படிப்பிக்கத் தேவசுதன் வனந்தரத்தில் செபத்தில் நிலைத்திருந்தார். செபத்தின் பிரதான அம்சங்களாகிய ஆராதனை, நன்றித்துதி, மன்னிப்புக்கோரல், மன்ருட்டு முதலியன அடங்கிய செபஞ்செய்தார். தாழ்மையைக் கற்பிக்கக் குனிந்ததலையுடனும், சாஷ்டாங்க வணக்கத்துடனும் செபித்தார்.

நாம் எமது பஞ்சேந்திரியங்களையும், சுகபோகங்களையும் அடக்கிஒடுக்க வேண்டுமென்பதை நமக்குக் கற்பிக்கத் தேவசுதன் உண்ணமலும் உறங்காமலும், கல்லிற் தலைசாய்த்தும், வெய்யிலில் உலர்ந்தும், பனியால் நடுங்கியும் கடுந்தபசு செய்தார்.

யேசுநாதசுவாமி நாற்பதுநாள் வனந்தரத்தில் அனுட்டித்த தபசின் ஞாபகமாகப் பரிசுத்தமாதாவாகிய திருச்சபை தபசுகாலத்தை நியமித்திருக்கிறது. இதைக் குறித்தே அர்ச். சின்னப்பர் "இது உவப்பானகாலம்; ஏனெனில், இன்று இரட்சணியத்தின் நாள்" (11 கொரி, 4: 2) என்கிறுர். ஆதலால் இந்த அரும் பெருந் தபசுகாலத்தை நாங்கள் நன்கு அனுசரிக்கவேண்டும்.

தபசுகாலத்தைச் சிறந்தமுறையில் அனுசரிக்க நாம் யேசுநாதசுவாமி வனந்தரத்தில் நாற்பது நாட்களாக இரவும்பகலுஞ் செய்தகடுந் தபசைப்பின்பற்ற வேண்டியது அவசியம். தியானம், செபம், தபம், தியாகம், தருமம் முதலியவற்றைச் செய்ய வேண்டும். உலகத்தின் சுகபோகங்களெல்லாம் பரலோகத்தின்கண்ணே துரும்புமல்ல என்று தள்ளிவிடவேண்டும். தபசு காலத்தில் திருச்சபை நியமித்திருக்கும் ஒருசந்தி சுத்தபோசனக் கடமைகளை அனுசரிக்கவேண்டும். அத்துடன் நின்றுவிடாது நமது அந்தஸ்துக்கும் ஆற்றலுக்குந்தக்கவாறு தருமக் கிருத்தியங்களை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் எங்களுக்கு இக்காலத்தில் வருஞ் சிலுவைகளாகிய துன்பதுரிதங்களை நல்லமனதுடன் சகித்துக்கொள்ள வேண்டும்.

எங்களுடைய சீவியகாலத்தில் நாங்கள் அதிகமாகச் செய்த ஒரு குற்றம் அல்லது ஒரு கெட்டபழக்கத்தைத் தெண்டித்துத் திருத்துவது; அத்தவறை இனிமேற் செய்வதில்லையென்றபிரதிக்கினை செய்வது; அக்குற்றத்துக்காகச் சீவியகாலம் முழுவதும் பரிகாரஞ் செய்வது முதலியன தபசுகாலத்தில் செய்யக்கூடிய பெரிய தபசு என அர்ச். கிறிஸ்தோஸ்தோம் சொல்லுகிறுர்.

லூத்தரன்போதகர் குருப்பட்டம்

லூத்தரன் சபையில் 18ஆண்டுகளாகப் போதகராயிருந்த சங். அஸ்கெர் ஸ்ரேறேஞ் அண்மையில் குருத்துவ அபிஷேகம் பெற்றிருப்பதாகக் கொப்பெனேகனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

49 வயதினரான இக்குரு கிண்ணரவல்லுநருமாவர். 1951-இல் மனந்திரும்பியபின் ஐந்து ஆண்டுகளாக ரோமையில் வேதப்பர் குருமடத்தில் வேதசாத்திரங்கள் கற்றுர். அங்கு செல்லுமுன் டேனிஷ் அரசாங்கம் நடத்திய கிண்ணரப் பரீட்சையில் அரங்கேறியிருந்தார்.

1958—பங்குனி 2-ம்தேதி

பரிசுத்த பாப்பரசர் சுபதினக் கொண்டாட்டம்

எங்கள் மகாமேன்மைதங்கிய மேற்றிராணியாண்டவர் அவர்கள் பரிசுத்தபிதாவின் சுபதினத்தை வெகுவிமரிசையுடனும், பக்தியருட்சி பரபரப்புடனும் கொண்டாடவேண்டுமெனச் சகல குருப்பிரசாதிகளையும், ஆசிரியர்களையும், பெற்ருேரையும் ஆவலாகவேண்டி நிற்கின்ருர்.

சம்பேதுருஅப்போஸ்தலரைத் தொடர்ந்து 272-ம் பாப்புவாக அவருடையசிம்மாசனத்திலே தற்போது வீற்றிருந்து ஆட்சிபுரியும் பரிசுத்த பிதாவாகிய பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர்மேல் அகிலஉலகத்திலும் பரவியிருக்கும் கத்தோலிக்கமக்கள் கொண்டிருக்கவேண்டிய அன்பு, அமைச்சல், பக்தி, பிரமாணிக்கத்தைப்பற்றிக் குருப்பிரசாதிகள் யாவரும் தங்கள் மந்தைகளாயுள்ள கிறிஸ்தவர்கட்குப் போதிப்பார்களாக.

யாழ்ப்பாணப்பட்டணத்தில் நடக்கவிருக்கும் கொண்டாட்ட நிகழ்ச்சிநிரல்

பிற்பகல் 4-30 மணி: பட்டணத்திலேஉள்ள சகல கத்தோலிக்கபாடசாலைகளுக்கும்சேர்ந்த பிள்ளைகள், பாப்பரசருடைய கொடிகள் ஏந்தி, ஆசனக்கோவில் மைதானத்தில் கூடுவார்களாக.

5-00 மணி: அணிவகுத்துச் செல்லுதல். கதீட்ரல்வீதி—சம்பத்திரிசியார்வீதி—பின்பு சம்பத்திரிசியார் விளையாட்டுமைதானம். பின்பு பாப்பரசருடைய கொடியை நமஸ்கரித்து வணங்கிநிற்றல். எங்கள் மேற்றிராணி ஆண்டவர் அந்த வணக்கத்தை ஏற்றுநிற்பார்.

5-45 மணி: உபந்நியாசங்கள். மேற்றிராணிஆண்டவர்களினது போதனை.

6-30 மணி: சற்பிரசாத ஆசீர்வாதம்.

குறிப்புகள்: பாடசாலைகளின் தலைமைஆசிரியர்கள் கவனிக்கவேண்டிய சிலவிஷயங்கள்:—

(i) மாணவர்கள் பாப்பாண்டவருடைய கீதத்தையும் மறுகீதங்களையும் பாடக்கூடியவர்களாய் இருத்தல்வேண்டும்.

(ii) அவர்கள் யாவரும் பாப்பரசருடையகொடியை ஏந்திவர வேண்டும்.

(iii) தங்கள் தங்கள் பாடசாலையின் கொடியையும் முன்அணியில் கொண்டுசெல்லவேண்டும்.

(iv) ஒவ்வொரு பாடசாலை மாணவர்களும், ஆசனக்கோவில் மைதானத்துக்கு வரும்போது, அணிவகுத்து, நிரைகூட்டி, பாப்பரசருடைய கீதத்தைப் பாடிக்கொண்டு வருவார்களாக.

எச். லெக்குதூர், ஓ. எம். ஐ.,
விக்கார் ஜெனறல்

மேற்றிராசனமாளிகை,
யாழ்ப்பாணம், 26–2–58.

சதாசகாயமாதா கோணம்

நான் நோவனைக்குப் போகக் கனவிலும் எண்ணவில்லை

(முன்தொடர்ச்சி)

நான் ரோட்டைக்கடந்து செல்லும்போது, கோவில்மைதானத்தில் ஒரு குருவானவர் அங்குமிங்குமாக உலாவுவதைக் கண்டேன். அவர் என்னைக் கண்டதும், புன்னகைபூத்த வதனத்துடன் என்னை வரவேற்ருர். கோவிலைவிட்டு வெளியேற எவ்வளவு அவதிப்பட்டேன்என்பதையும்மறந்து, அவரை அணுகி, புதிதாகவாங்கிய செபமாலையை ஆசீர்வதிக்கும்படி கேட்டேன். அதற்குத்தாம் ஒருவிசேஷ ஆசீர்வாதம் அருளவேண்டும்என்றும், அதற்குரியசெபம் தமக்கு ஞாபகத்தில்இல்லையென்றுங்கூறிக் குருவானவர் என்னைத் தமது அறைக்குக் கூட்டிச்சென்றுர். நானும் ஒருஅட்டியும்சொல்லாது அவர்பின்னே மிக்க சாந்தமாய்ச் சென்றேன். செபமாலை ஆசீர்வதிக்கப்பட்டபின்னர், சமூகவிஷயங்களைப்பற்றிச் சற்றுச்சல்லாபித்தோம். அது ஏதோவிதமாக வேதசாத்திர விவாதத்தில் நம்மை இறக்கிவிட்டது. கிறீஸ்துநாதர் தாம்விரும்பியவிதமாகத் தம்மைப்பின்பற்றுபவர்கள் தூயஆவிக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்ற எண்ணம் என்மனத்தில் மெய்யாகவே உறுத்துவதால் நான் ரோமான் கத்தோலிக்கசபையைவிட்டுத் தூயஆவிக் கூட்டத்திலசேர உத்தேசித்துள்ளேன் என்று அவருக்குக்கூறினேன். நான் நினைத்துள்ளபடியே செய்யச்சம்பவித்தாலும், எனக்கும், எனதுகுடும்பத்துக்கும்செய்த சகலவிதஇகபரநன்மைகளை முன்னிட்டுப் பரிசுத்ததேவதாயார்மட்டில் நன்றியுடையவனுக நடப்பேன் என்றும், அவளைச் சங்கிப்பேன்என்றும் சொல்லாமல்விடவில்லை. குருவானவருடைய முகத்தில் திருப்திகரமான புன்முறுவல தவழ்ந்தது. தேவதாயார்மட்டில் இவ்வளவு பிரமாணிக்கமுள்ள ஒருவரை அவள் ஒருபோதும் மதமாற்றஞ்செய்ய விடமாட்டாளென்று தனக்கு நல்லாய்த் தெரியுமென்று அவர் பின்னெருமுறை எனக்கு விளக்கிக்காட்டினுர்.

ஆண்டவர் என்மட்டில்காட்டிய அதிசயத்துக்குரிய ஒருசம்பவத்தை நான் இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஒருயேசுசபைக் குருவானவரோடு அல்லது திருமீட்பர்சபைக் குருவானவரோடு கடைசியாகச் சம்பாஷிப்பதற்குமுன்னர் நான் மதமாற்றஞ்செய்வதில்லையென ஏற்கனவே தீர்மானித்துக் கொண்டேன். பொறளைக்கு ஒருஞானவொடுக்கம் போதிக்கவந்த இவர் ஒரு யேசுசபைக் குருவானவர். தாம் யேசுசபைக்குச்சேர்ந்த குருவானவர்என அவர் சொன்னபோது உண்மையாகவே எனதுமனஞ் சந்தோஷத்தாற் துள்ளிக்குதித்தது. தேவன்தாமே இந்தச்சந்திப்பை எனது நன்மையைக் கருதி ஒழுங்குபடுத்திக் கொண்டாரென நான் உணர்ந்தேன். தாம் யேசுசபைக் குருவானவர்என ஏன் அவர் வெளியிடவேண்டும் என்ற எண்ணம் எனக்கு மேலும்மேலும் அதிசயத்தையும், சந்தோஷத்தையும் அளித்தது. சில நிமிஷவேளையில் முடியுமென இருந்த நமதுசம்பாஷணை ஒருமணித்தியாலமும் நாற்பதுநிமிஷங்களும் எடுத்தது. இந்தச் சொற்பகோத்துள் எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோமை இராச்சிய பூபதியே வாழ்க!

உலக சமாதானத்தின் ஒப்பற்றதந்தையே வாழ்க! வாழ்க!

பங்குனித்திங்கள் இரண்டாம்நாள், கத்தோலிக்கசரித்திரத்தில் ஒருசிறந்த நாள்; நானூறு கோடிக்குமேலான கத்தோலிக்கமக்களின் உள்ளங்களில் பரிபூரணானந்தம் நிறைந்தநாள்; எம் பரிசுத்தபிதாவாகிய பாப்பாசர் பிறந்த நாள். இப்புனித பொன்னாளிலே கத்தோலிக்கஉலகு பரிசுத்தபிதாவின் மேற்கொண்டுள்ள பக்திமேலீட்டால புளகாங்கிதமடைகின்றது; அவரது ஈடிணையற்ற மகத்துவத்தை எண்ணி யெண்ணி இறும்பூதெய்துகின்றது; தன் அமைச்சலையும், தாழ்ச்சியையும் காண்பித்து ஆனந்தக்கண்ணீர் சொரிகின்றது; அண்ட சராசரங்களையும் உண்டுபண்ணின தேவனிடம் அவருக்கெல்லா நலனுந்தருமாறு இரந்துநிற்கின்றது; விண்ணுலகானந்தம்வீசும் வதனமலர்ச்சியுடன் அவர்தூயகமல பாதங்கள் பணிந்து வணங்கிநிற்கின்றது.

அதோ, நீலவானத்திலே மாண்புநிறைபிதாவின் வெண்பொற்றுவசம் பட்டொளிவீசிப் பறக்கின்றது; சிரந்தாழ்த்தி, கரங்கூப்பி, செங்கோலரசரின் திருநாமம்வாழ்த்தி மக்கள்குழாம் கொடிவணக்கம் செய்கின்றது; பள்ளிச்சிறார் தம்மலர்க்கரங்களில் கொடிகளேந்திப் பவனிவருங்காட்சி கண்ணையும் கருத்தையும் கவர்கின்றது. சிந்தைக்குத் தேன்பெய்து சுவைநிறைக்கும் இம்மகிழ்ச்சிவிழாவானது கத்தோலிக்கஉள்ளமொன்றே விளங்கிக் கொள்ளத்தகும் விசுவாசநிகழ்ச்சியாகும்.

பரிசுத்தபாப்பாசர் கிறிஸ்துநாதரின் பிரதிநிதி; எம்சத்தியதிருச்சபையின் பிரத்தியட்சமான உத்தமதலைவர்; சர்வவல்லபதேவனின் எக்காளத்தொனி; உலகம் கண்டதிசயிக்கும் பளிங்கினைய தூயவரம்—வழுவாவரம்—அழியாவரம்படைத்த தளபதி; சத்தியத்தின் பிரகாசத்தூண; ஒழுக்கத்தின் பொற்சின்னம்; நீதியின் உரைகல்; பரிசுத்ததனத்தின் ஊற்று; மூவுலகங்களையும் தாங்கி ஏந்திநிற்கும் முழுவைரமணிக்கல்; காரிருள் கவிந்துநிற்குமுலகத்திற் பேரொளிபரப்பும் கனகமணிச்சுடர்; இடாம்பீகவெப்பத்தாற் கருகும் இவ்வுலகிற்குக் குளிர்ச்சியும், சாந்தியும்நிறைக்கும் குளிர்நிலா.

மாசற்றபரலோக திரவியங்களை வைத்திருக்கும் மணிப்பொக்ஷம்அவர்; மோட்சத்தின் திறவுகோல் அவரது திருக்கரங்களிலேயே இலங்குகின்றது; அவர் நரகலோகம் வெல்லரிய திருச்சபையைச்சுமந்துநிற்கும் அசையாப் பாறையாயிருக்கிறார்; அஞ்சாநெஞ்சினராய் மிளிர்கிறார்; அவரது புனிதமும், போழகும் போற்றிப்புகழ வார்த்தைக்கடங்கா.

பாப்பரசரில்லையேல் நாம் அநாதைகள்; பதிதர்; மேய்ப்பன்அற்ற மந்தைகள். ஆயனில்லா ஆடுகளாய்ச் சிதறிப்போவோம்; பொல்லாங்கில்விழுந்து தத்தளித்துப் பதறிப்போவோம்; நரகஅலகையின் கொந்தளிப்பைச் சிங்கம்போல் எதிர்த்து இன்று அவர்நம்மை ஆபத்தினின்று தற்காத்துவருகிறார். அவரில்லையேல், சத்தியமறைச் சூரியன் கிரகணஇருளில் மறைந்துவிடும். கரையற்ற நச்சுக்கொள்கைகள் தலையெடுத்துத் தாண்டவமாடும் இப்பூவுலகில் அவர் அணையின்றி, துணையின்றி நாம் அல்லற்படுவோம். அவரே விழி; அவரே ஒளி; அவரே நமக்கு ஞானவழி. இப்பொய்யுலகின் மாயங்களில் நாம்சிக்கி, அலையாமல் அழியாத நித்தியபாக்கியத்தையடையப் புனித வழிகாட்டியாய்ப் பரிசுத்ததந்தையை எமக்குத்தந்த இறைவனுக்கு அனந்த கோடி வணக்கமும், நன்றியும்செலுத்துவோம்.

வண. வி. ஜே. எவ். சேவியர் சுவாமிகள்

திருச்சபையின்றி நமக்கு இரட்சணியமில்லை. இச்சத்தியமானது நம முன்னோர்வாழ்வின் அறிவிலும், உள்ளத்திலும் ஆழ்ந்து வேரூன்றிக்கிடந்தது. திருச்சபையின் மகாமகத்துவத்தைப்பற்றி அப்போஸ்தலர்களோடு வாழ்ந்து, அவர்களைத்தொடர்ந்து 2-ம நூற்றாண்டில லயன்ஸ் நகரின் மேற்றிராணியாராய் விளங்கிய அர்ச். இறேனேயஸ்அவர்களின் அறைகூவலைக் கேளுங்கள்:

"அதன் மேலானதலைமையின் காரணமாக அதனுடன் உடன்படுவதே மற்றெல்லோருக்கும் ஏற்றது. அதனிடத்தில் தான் சகல இடத்தைச்சேர்ந்த விசுவாசிகளும் தங்களுக்கு முன்பு போதிக்கப்பட்ட வேதவிசுவாசத்தைத் தூய்மையாகப் பாதுகாக்கிறார்கள். தன்னுடைய பழமையினால் மற்றெல்லாவற்றிலும் பெருமையும் கனமும் உடையதாயும், அப்போஸ்தலருள் மிகுந்த மகிமை பெற்றவர்களான பேதுரு, பாவுலு ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்டு, யாவராலும் அறியப்பட்டதாயும் உள்ளது. அதன்மேற்றிராணிமார் தங்கள் வரிசையின் காரணமாக, அப்போஸ்தலிக்க பாரம்பரியம் முழுமையாக எமக்கு வழிவந்துள்ள [illegible]

இருக்கின்றனர். இந்த ஓர் உண்மையினாலேயே தன் விசுவாசத்தில் அதனின்றும் வேறுபடுகிறவன் தவறியவனாகின்றான்."

அவரது அமுதவாக்கியங்களிலிருந்து அழியாத உண்மைமுத்துக்களின் ஒளிகாலுகின்றது; புனித பாப்பாசரின் தனிமகிமை கைநெல்லிக்கனியாய்க் காட்சிதருகின்றது.

இந்தஅப்போஸ்தலிக்க தொடர்பில் எங்கள் பன்னிரண்டாம் பத்திநாதபாப்பாசர் இருநூற்றெழுபத்திரண்டாம ஒளிமணியாய்ப் பிரகாசிக்கின்றார். அவர் இப்போது அர்ச். பேதுருவானவரின் மகத்துவம்தாங்கிய சிம்மாசனத்தில் மகிமைப்பிரதாபத்துடன் வீற்றிருக்கின்றார். அவர் எண்பத்திரண்டு வயதுமுதியவராயிருப்பினும் தெய்வீக இளமைப்பொலிவோடு அன்பின் செங்கோலேந்தி எம்மைஆண்டுவருகிறார். அவர் 1876-ம்ஆண்டு பங்குனித்திங்கள் இரண்டாம்நாள் இவ்வுலகில் தோன்றினார். 1939-ம் ஆண்டு பங்குனித்திங்கள் இரண்டாம்நாளிற்றான் தம் சிம்மாசனத்தையும்ஏற்றுக்கொண்டார். இவ்வருடம் அவராட்சியின் 19-ம்வருடமாகும். இப்பத்தொன்பது ஆண்டுகளுக்குள் எம்நேசத்தந்தையாரின் புகழொளி அகிலம்முழுதும்பரம்பிவிட்டது. அவரது நற்குணசீலங்களையும் மாட்சிச்சிறப்பையும் பிறர்வாயிலாகக்கேட்கும்போது எம் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியால் துள்ளிக்குதிக்கின்றதன்றோ? இவ்வமயம் குணக்குன்றானதந்தையை, பரிசுத்தத்தின் ஊற்றானபிதாவை எமக்குப்பிதாவாகத் தெரிந்துகொண்ட தேவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

சமாதானத்தின் சம்மனசு

இரண்டாவது உலகப்பெரும்போர் மூண்டுகொண்டிருந்த சமயத்தில் எங்கள் பரிசுத்தபிதா பாப்பாண்டவராக உயர்த்தப்பட்டார். முதலாம் உலகப் போரைக் கண்ணாரக்கண்ட தந்தை மூண்டுவந்த இரண்டாம்போரை நிறுத்துதற்கு மிகமுயன்றார். உலகசமாதான வாஞ்சையால் உந்தப்பட்டுத் தேசங்களுக்குப் புத்திமதிகூறினார்.

அவரது நிருபங்களில் சமாதானம் நிழலிட்டது; சொற்பொழிவுகள்யாவும் சமாதானச் சுருக்கமாகவே இலங்கின; சமாதானத்தையே தலையங்கமாக வைத்துப்பிரசங்கங்களாற்றினார்; பேச்செல்லாம் சமாதானத்தின் பெருமையைப்பேசி, எழுத்தெல்லாம் சமாதானத்தின்எழுத்தாய்க்கோத்துச் சமாதானச் செயலாளனாய்த் தொண்டாற்றினார்; உலகமக்களின்துயரைக் கற்பனைபண்ணி உள்ளம்பதறி உருகினார்; [illegible] கொடுமையைத் தணிக்க அல்லும்பகலும் ஓயாதுழைகின்றார்; உலகசமாதானத்தை விரைவில் உண்டாக்கப் பிரார்த்திக்கும்படி உலகமக்களை ஏவினார்; மாசில்லாத இருதயநாயகிக்கு உலகை நைவேத்தியம்செய்தார்; மனச்சோர்வின்றி உழைத்து, உலகசமாதானத் தந்தையென்று உலகினரால் ஏகமனதாய்ப் போற்றித் துதிக்கப்பட்டார்.

பிறர்சிநேகத்தின் பிதா

போரின்கோரவெறியால் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டமக்களுக்குப் பாதுகாப்பளித்தார்; சிறைப்பட்ட போர்வீரர்களுக்கு ஆறுதல்கொடுத்தார்; அவர்கள் குடும்பங்களுக்கு அருந்துணைபுரிந்தார்; குழந்தைகளை இழந்தபெற்றோர்க்கும், பெற்றோரைப்பிரிந்த குழந்தைகளுக்கும் உற்றசமயங்களில் உதவிதந்தார்; பொழுதெல்லாம் பிறருக்குத்தொண்டு செய்வதையே நோக்காய்க்கொண்டு பாடுபட்டுழைத்தார்; "பிறர் அனுபவிக்கும் பரிதாபநிலைகண்டு மரணமட்டும் கவலையாயிருக்கிறோம்" என்று ஒருபிரசங்கத்தில் விம்மினார்; சாதிசமயவேறுபாடின்றி உள்ளவரை இரந்து, இல்லாதவர்க்குப் பகிர்ந்து, எல்லோரும் வியந்துபோற்ற நடந்தார். அவரது பிறர்சிநேகத்தைக் கண்டு உலகமே அதிசயித்தது. கடந்த சிலமாதங்களின்முன் இலங்கையில் நடந்தவெள்ளப்பெருக்கால் நெஞ்சம் வெடித்தபிதா மனவேகத்துடன் புரிந்த பேருதவியை மக்கள்மறக்கவே முடியாது.

தொழிலாளரின் அன்பர்

திருச்சபைத் தாபகர் ஒரு தொழிலாளி, நசரேத் கிராமத்தில் வசித்த ஒருதச்சன். திருச்சபை ஆதிமுதல் தொழிலாளரின் நலன்களைக் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாத்து வந்தது. ஆனால், சிற்சிலரிடத்தில், சிலவிடங்களில் இக்கண்காணிப்பு அருகிவந்தது. இந்த நித்திரைநிலையைத் துயிலெழுப்பித் தொழிலாளரின் உன்னதநிலையை உருவாக்க விசுவாசவானில் பிரகாசம்தரும் தொழிலாளரின் மாதிரிகையான அர்ச். சூசைமாமுனிவரைச் சுட்டிக்காட்டித் தொழிலாளருக்கு ஒரு புதுவைபவம் ஏற்படுத்தினார். "ஆலோசனைச் சமயம் இதுவன்று; செயல் புரியும் நேரமிது" என்று தொழிலாளரான இளைஞருக்கு உற்சாகமூட்டினார். "என் சகோதரனே! உண்மையை நாடிவா; ஒளியை நாடிவா; அன்பை நாடிவா; என ஏனைய சோதரர்க்கு முழங்குங்கள்" என்று உணர்ச்சியூட்டினார். இளைஞர்உலகம், தொழிலாளர்உலகம் அவரது அன்பின் குரலொலி கேட்டு அகமகிழ்ந்தது.

எங்கள் முன்மாதிரிகை

எமது நேசத் தந்தையாகிய பாப்பாசர் எங்கள்யாவருக்கும் ஒரு மேல்வரிச்சட்டம்; முன்மாதிரிகைச் சோதி. ஆண்டவரையும், மாதாவையும் அவர் மிக நேசித்தார். பரலோக தாயின் மகுடத்தில் வைடூரியம் ஒன்று பதித்தார்—தாயின் ஆரோபணத்தை வேதசத்தியமாக்கினார். வேதப் பரப்புதல் வேலையில் அவர் விடாய்கொண்டுழைக்கிறார். குருத்துவத்தின் மகத்துவத்தை உலகெலாம் பரப்ப—தேவ அழைத்தல் பெருக அயராது முயற்சிக்கிறார். இரும்பைக் கவரும் காந்தம்போல் அன்பாலும், ஞானப்பண்பாலும் உலகைத் தம்மைநோக்கியிழுக்கிறார். உலகத்தில் பிறமதத்தாரும் அவர் முகம் பார்க்க ஆசித்துக் குவிகின்றனர்.

இப்பொன்தினத்திலே மைந்தராகிய நாங்கள் எங்கள் தந்தையைக் கண்டு,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

சந்தேகங்கள் எல்லாவற்றையும் காற்றாய்ப்பறக்கச் செய்தார். அவருடைய அநுதாபமும், ஆழ்ந்தஅறிவும் நான் பொறித்த பலகேள்விகளுக்கும் குழந்தைப்பிள்ளைதானும் விளங்கக் கூடிய இலகுவான மறுமொழிகளைத் தந்தனர். அவற்றை இப்போது நினைக்கும் போதும் ஆண்டவரின் அதிசயவழிகளைப்பற்றி அக்களிப்படையாதிருக்க முடியவில்லை.

எங்கள் சம்பாஷணை முடிந்தபின்பு நான் குருவானவரிடம் பாவசங்கீர்த்தனம்பண்ணித் திரும்பவும் சர்வேசுரனுடைய பிள்ளையானேன். கோவிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நோவனையிற் பங்குபற்றும்படி குருவானவர் என்னைக் கேட்டுக்கொண்டார். செவ்வாய்க்கிழமையிலும், நோவனையாஎன எண்ணி ஆச்சரியப்பட்டேன். ஆனால், மெய்யாகவே 200-ம்நோவனைக்கு ஆயத்தமாக அன்றுதினம் ஓர்நோவனை நடைபெற்றது. "என் இரட்சணியம் ஆகிய சர்வேசுரனிடத்தில என்மனமும் ஆனந்தமாய்எழும்பி அகமகிழ்கின்றது" என்ற மகுடவாக்கியத்துடன் பிரசங்கம் நடந்தது. எனது மனோநிலைமையை விபரிக்கவும் வேண்டுமா?

இப்படியே அதிசயத்துக்குரிய விதமாக நான் ரோமான் கத்தோலிக்க திருச்சபையில் இருக்கும்பாக்கியத்தைப் பெற்றேன்.

சதாசகாயமாதாவே! உமக்குப் புகழ்ச்சி உண்டாகுக

(திரு. ஜவன் விக்கிரமசிங்கிஎன்பவர் "நோவனைப் புதினம்" எனும் ஆங்கிலபத்திரிகைக்குஅனுப்பிய கடிதத்தின் தமிழ்ச் சுருக்கம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் கட்டுரை

ஊருணியும் பேரணியும்

உணவில்நீரும், மண்ணில் பொன்னும் சிறந்தன என்பது யாவரும் அறிந்தது. மக்கள்கூடிவாழ்ந்தபோது, பள்ளங்கண்டஇடத்தில் மழைநீர் தேங்கி நிற்பதைக்கண்டு அதனை இருவகையாகப் பயன்படுத்தினர். சிறுநீர்த்தேக்கங்களை உடல்உடை கழுவித்தூய்மை செய்தற்கும், பெருங்குளங்களின் நீரைச்சமைப்பதற்கும், குடிப்பதற்கும் பயன்படுத்திப் பாதுகாத்துவந்தனர். இங்ஙனம் மக்கள்வாழ்வே மழைநீரால் அமைந்ததால், 'மழையின்றிமா நிலத்தார்க்கு இல்லை' என்று சங்கச்சான்றோர் கூறினர். நம்வள்ளுவப் பெருந்தகையாரும் இறைவணக்கம் கூறினவுடனே, அருள்வணக்கங்கூறுவார்போன்று மழைவளம்கூறும் வான்சிறப்பைச் சிறப்பித்துக்கூறினார்.

நிறைந்தநீரில் 'ஊருணி' என்பது குளத்தைக் குறிப்பதாகும். ஊருணியென்றால் ஊர்மக்கள் அனைவர்க்கும் பொதுவாக உணவுக்கென்று அமைந்த, நீர்நிறைகுளம் என்று பொருள்படும். அக்குளம் நீர்நிறைந்து பயன்தருதல் மக்கள்செயலால் ஆவதில்லை. இயற்கையாகப் பருவகாலத்தில் பெய்யும் மழைநீர் அக்குளத்தை நிறைக்கிறது. மழைநீர் நிறைந்தபிறகு மக்கள் தம் வாழ்க்கைக்குப்பயன் படுத்த அவ்வூருணிநீர் பழுதடையாது அழுக்கேறு வகையில் வேலியும் பாதுகாப்பும் அமைத்துக் காக்கின்றனர். தங்களுயிரெனப் போற்றுகின்றனர். அவ்வூரார் அனைவரும் அவ்வூருணியைத் தங்கள் சொந்தநீர்நிலையாகவே கருதிமதிக்கின்றனர். இதனைக் கண்ணிற்கண்டு, கருத்திற்கொண்டு, ஓர்உவமையாக்கி, நமக்கும் நம்மொடுவாழும் நன்மக்கட்கு நன்னெறி புகட்டுமாறு வள்ளுவர் ஒரு திருக்குறள் தீட்டினர். அஃது,

"ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு"

என்பதாம். வானின்று பொய்யாத மேகம் மழைநீரை மேடென்றும் பள்ளமென்றும பாராதுபெய்ய, அந்நீர் வாய்க்காலவழிப் பெரும்பள்ளமாகிய குளத்தில் வந்துதங்கிற்று. அதனைப் பெருமக்கள் பாதுகாத்துப் பயன்பெறுகின்றனர். அதுபோன்றல்லவா செல்வமும்பயன்பட வேண்டுமென்று ஆசிரியர்உள்ளம் ஆவல்கொள்ளுகின்றது. ஊருணிநீர், மக்கள் முயற்சியன்று. ஆனால், அது தமக்குப் பயன்படுதலான் அதனைத் தம்மதேயென்று போற்றி வாழ்கின்றனர். அதுபோல, ஒருவனிடம் செல்வமிருந்தால் அச்செல்வம் அவ்வூரிலுள்ள மக்கட்குப் பயன்படுமேல அதனை அம்மக்கள் தம்சொத்தாகவே கருதிப்பாராட்டுவர். பாதுகாப்பர். அன்றியும் நீரைப்போற்றும்மக்கள் நீர்நிற்கும் குளத்தையும் போற்றுவதுபோல் செல்வத்தை அநுபவிக்கும் மக்கள் செல்வமுடையானையும் ஏத்திப் புகழ்வர்.

நிற்க, கழுவுநீர் நின்றகுட்டைகள் பயன்படாமையால் புறக்கணிக்கப்படுதல்போல், பழிக்கப்படுதல்போல், செல்வமும் பயன்படாதபோது செல்வனும் புறக்கணிக்கவும், பழிக்கவும்படுகிறான் என்பதும் நாமறிகிறோம்.

ஊருணியில் மழையின்மையால் ஒருகால் நீர்குறையுமாயின் அதனைமக்கள் தங்கள்குறைவாகநினைத்து இறைவனைவழிபட்டு, மழையைப்பெற்று வளம்பெறுதல்போல, பேரறிவாளனும் ஒருகால் உலகுக்கு உதவிச்செல்வம் இழந்து வறிஞனயினும் மக்கள்தங்கள் செல்வம் இழந்தாற்போல வருந்தி அவன் பெருஞ்செல்வம் பெறவேண்டுமென்று வேண்டுவர்; பெறற்கரும் இவ்வருங்கருத்துக்களையமைத்து உவமைகாட்டிச் செல்வர் பெரும்பயனடையும்வழியுரைத்தார் வள்ளுவர்.

பொன்னும் ஒருமண்தான். ஆனால், அதனிடம அழுத்தமும்ஒளியும் இருப்பதால் அதனை மணஎன்னுது பொன் எங்கின்றோம். பொன்னானது மண்ணினும் மதிக்கப்பட்டது ஏன்? ஏனெனில், அது நிலைத்து, மங்காச்செல்வமாய் இலங்குகின்றது; அணிகலனாய் அழகுசெய்கின்றது; இன்பம் பெருக்குகின்றது. இதனால் பொன்பெருமையுணர்ந்த வள்ளுவப்பெருந்தகை மனிதனைப் பொன்னுக்க நினைக்கிறார். சுடச்சுட ஒளிவிடும் பொன்போல மனிதன் ஒளிரவேண்டும் என்று உபதேசிக்கிறார்.

"சுடச்சுடரும் பொன்போல ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோக்கிற்பவர்க்கு"

என்ற பொற்குறளைக் கொடுக்கின்றார்.

மனிதன் இயல்பாகவே சிலகுறைகளையுடையவன், அறியாமை எனும் மாசுபடிந்தவன். மற்றையஉயிர்கள் போல் இன்பவேட்கையுடையவன். எப்போது தன்இன்பத்தைக் குறைத்துக்கொண்டு அறியாமைவிலக்க முயற்சிக்கின்றானோ அப்போதே மனிதன் பிறஉயிர்களினும் தலைசிறந்தவனாகின்றான். ஆகவே, துன்பத்தைக்கண்டு அஞ்சாது துன்பத்தை இன்பமாக மாற்றியமைக்கும் மனப்பான்மை மனிதனுக்கு வேண்டும். அதுவே, அவன் அறிவைவிளக்கும் அவனைஉயர் மனிதப்பிறவியாக்கும். எப்படிப்பொன்னானது மண்ணுனும் மண்ணினின்றும் பிரிந்து தன்னை அனல் சுடச்சுட மாசுநீங்கி, ஒளிவீசி பொன்னெனப் போற்றப்படுகின்றதோ, அவ்வாறே மனிதனும், துன்பநெருப்பால் சுடப்பட்டு அறிவொளிவீசி ஆன்மசுத்தி பெற்றுப் பொன்னாகின்றான். அன்றியும், பொன்எப்படிச் செல்வமாகவும், போணியாகவும் விளங்குகின்றதோ அதுபோல எவன்ஒருவன் தன்உழைப்பைப் பிறருக்குப் பயன்படுத்துகின்றானோ அவன் மக்கட்குச் செல்வமாகவும், அணிகலமாகவும் விளங்குவான் என்று எடுத்துரைக்கின்றார்.

இவ்விரண்டு குறள்களின் உவமையினாலும், நீரானது, இயல்பானமழையாலுண்டாகி ஊருணியாய் அமைந்து உயிர்க்குதவிப் பெருமைபெறல்போல மனிதனும் தன்இயல்பான அன்பால், செல்வத்தைப் பிறர்க்களித்துப் பயன்படுத்திவரவேண்டுமென்பதும், பொன்னானது, மண்மாசுபடிந்துகிடந்தாலும், சுடச்சுட ஒளிவீசிச் செல்வமாய் அமைதல்போல மனிதன் தன் இயற்கைக்குறைபாடுகளைக் துன்பநெருப்பாற்சுட்டு அநுபவஅறிவொளி பெற்று அனைத்துயிர்க்கும் தலைமகனாய் விளங்கவேண்டுமென்பதும் கூறப்பட்டமையறிக.

எனவே, நாம் ஊருணியாகவும், பேரணியாகவும் நின்று அன்பும் அருளும்பூண்டு, இம்மையின்பமும் மறுமையின்பமும்துய்க்க நம்மைப் பணபடுத்தி வாழ்வோமாக.

— A. N.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருக்குடும்பத்தினதும், பரிசுத்தலூர்துமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். தெரேசம்மாள் ஆகியோரினதும் உதவியால் எங்கள்மகளுக்கு ஏற்பட்ட கடும்நோய் குணமடைந்தது. தவிர நாம்கேட்டுக்கொண்ட பற்றும்பலகோரிக்கைகளும் கிடைக்கப்பெற்றோம். ஆகவே, எங்கள் நன்றியையும், ஸ்தோத்திரத்தையும்தெரிவிக்கின்றோம். இவர்களின் நாமம் என்றும் புகழப்படக்கடவதாக. இன்னும் இவர்களின்இரக்கம் எங்கள் குடும்பத்தின் மத்தியில் என்றும்நிலைப்பதாக.

கொழும்பு Mrs. L. P.

அங்கும் இங்கும்

உலைவைப்பதாகும்

"......மதபாடசாலைகளைத் தேசியமயமாக்குதல்என்ற கூச்சல் நாட்டின் நலனுக்கே உலைவைப்பதாகும். அரசாங்கம் இத்தகையசெயலை நடைமுறைக்குக் கொண்டுவர நாம்சிறிதும் அனுமதியோம். இத்தகைய வேண்டாதநடவடிக்கைகளை இறுதிவரை எதிர்த்தே தீருவோம்."

திரு. வி. ஏ. கந்தையா,
ஊர்காவற்றுறை, எம். பி.

அரசினரைக் கேட்டுள்ளேன்

"தீவுப்பகுதியில் கடந்தசிலவருடங்களாகச் சயரோகத்தினால் பீடிக்கப்படுவோரின்தொகை அதிகரித்துவருவதையிட்டு நான் அரசினருக்கு எடுத்துரைத்துள்ளேன். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்தசிகிச்சையளிப்பதுடன் ஏனையோருக்கும் இந்நோய் பரவாதவண்ணம் தடைசெய்வதில் தீவிரமாக ஈடுபடுமாறும் அரசினரை நான்வற்புறுத்திக் கேட்டுள்ளேன். அதிகாரிகள் இவ்விஷயத்தில் தீவிரநடவடிக்கைகள் எடுப்பார்களெனக் காத்திருக்கிறேன்."

திரு. வி. ஏ. கந்தையா,
ஊர்காவற்றுறை, எம். பி.

நான் நினைக்கவில்லை

"எம். ஈ. பி. அரசாங்கத்திலுள்ள மந்திரிகளிடையே ஒற்றுமையில்லை. அவர்கள்ஒவ்வொருவரும் ஒவ்வொருவரைக் குற்றஞ்சாட்டுகின்றனர். இதன் காரணமாக அரசாங்கத்தின்மற்றவேலைகள் தடைப்பட்டுவிட்டன. நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையையோ அல்லது வாழ்க்கைச்செலவு அதிகரிப்பை நிவிர்த்திசெய்யவோ அரசாங்கம் இதுவரை எதுவுமே செய்யவில்லை. அரசாங்கம்எடுக்கும் எல்லாமுயற்சிகளுமே தோல்வியடைந்து விடுகின்றன. இதற்குச் சரியானதிட்டம் வகுக்கப்படாததே காரணமாகும். இந்தஅரசாங்கம் நீண்டகாலம் பதவியிலிருக்குமென நான் நினைக்கவில்லை. இந்நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத்தீர்க்க வேண்டுமானால் தோட்டங்களை உடனடியாகத்தேசியமயமாக்கவேண்டும்."

டக்றர் என். எம். பெரேரு,
எதிர்க்கட்சித் தலைவர்.

பிரயோசனமுமில்லை

"அமைச்சர்பதவியிலும்பார்க்க நம் மொழி, சமயம், நாடு ஆகியனவே எமக்கு மிகமேலானதாகும். எங்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் சுமுகமானமுறையில் தீர்த்துவைக்கப்படாவிடின் இந்தஅரசாங்கத்தினால் எத்தகைய பிரயோசனமுமில்லை."

திரு. சி. ஆர். பெலிகமன,
தலதாபன கலாசார அமைச்சர்

சகோதரர்களாக வாழவேண்டும்

"நாட்டின் எந்தப்பகுதிகளிலும்சரி சிங்களவரும், தமிழரும் உடன்பிறந்த சகோதரர்களாக வாழவேண்டும். துரதிர்ஷ்டவசமாகச் சிலகாலமாய் எங்குபார்த்தாலும் இவ்விருபகுதியினர்க்கும் இடையில் மனவேற்றுமைகள் காணப்படுகின்றன. இந்நிலையை மேலும் வளர்விடாது, ஒருநல்லநிலையை உண்டாக்க நாம் முயலவேண்டும்."

திரு. டி. இராஜேந்திரா,
வவுனியா, தலதாபனஉதவிஅதிபர்

நமது இலட்சியம்

"சமய சகிப்புத்தன்மையும், வகுப்பு ஒற்றுமையுமே நமதுஇலட்சியமாகும். இந்தஇலட்சியத்தைத் தேசியமுறையில் பெறுவதற்காகத்தான நாம்பிரயத்தனங்கள் செய்துவருகிறோம். நாம் முன்னேற நமது சொந்தஉரிமைகளைமட்டும் மதித்தால்போதாது. மற்றவர்களின் உரிமைகளுக்கும் மதிப்புக் கொடுக்கவேண்டும். நமது உரிமைகளைப் பாதுகாக்கையில், ஏனைய மக்களின் உரிமைகளையும் பாதுகாக்கவேண்டும்."

பிரதமர் பண்டாரநாயக

—*—

விஞ்ஞானம்

உருளும் உலகில்

இங்கிலாந்து :

வெளுத்த மஞ்சள்நிறமுள்ள தூள் ஒன்று இப்போது இங்கிலாந்து மருந்துக்கடைகளில் கிடைக்கிறது. தண்ணீரோடுகலந்து அதைப்பருகினால் அதனுதவியோடு மனிதர் உயிர்வாழமுடியுமாம்.

* * *

அணுவலியினால் இயங்கும் கடிகாரம் உலகத்திலேயே முதன்முறையாக இங்கிலாந்தில் 'றக்பி'யில் நிறுவப்பட்டிருக்கிறது. இக்கடிகாரம் ஏனைய சிறந்த கடிகாரங்களைவிட 30மடங்கு நுட்பமான நோத்தைக்காட்டுகிறது.

பிரான்ஸ் :

பிரான்ஸ் விஞ்ஞானக்கழகத்துத் தலைவர் கால்நடைகளின் கருவிலிருந்து ஓர்புதிய சீவமருந்தைத் தயாரித்துள்ளார். இது வயோதிகரின் உடம்பில் பாய்ச்சப்பட்டதும் களைப்பைநீக்கிப் புதியவலுவையும், புத்துணர்ச்சியையும் அளிக்கிறதாம்.

அமெரிக்கா :

தானாகவே சமைக்கும் இயந்திரம் வந்துவிட்டது. அதில் 14வகை உணவுகளைத் தயாரிக்கிறார்களாம். உணவுப்பொருட்களைமட்டும் நாம் கொடுக்கவேண்டும். 14வகை உணவுகளுக்கும் 14வகைப்பொத்தான்கள்உண்டு. நமக்கு எந்தஉணவுதேவையோ அந்தப் பொத்தானை அழுத்தலாம். உணவு சமைத்துமுடிந்ததும் சாப்பாட்டுமணி அடித்து [illegible] அழைக்கும்.

ஜேர்மனி :

இருதயம், சுவாசப்பையாகிய இரு உறுப்புக்கள்செய்யக்கூடிய வேலைகளைச்செய்ய ஓர்இயந்திரம் கண்டுபிடித்திருக்கின்றனர் இதன்உதவியோடு உயிருக்கு எவ்வித ஆபத்துமின்றி இரண்டரைமணிநேரம்வரை ஒருசத்திரசிகிச்சை செய்துமுடிக்கப்பட்டிருக்கிறது.

ருஷியா :

செயற்கைக்கடல் : 337மைல் நீளமுள்ள ஒருசெயற்கைக்கடலை ருஷியா தோண்டிமுடித்துள்ளது. இதில் இன்னும் தண்ணீர்விடவில்லை. தண்ணீர்விட்டதும் சீனாவிலிருந்து காராக் கடல்வரை கப்பல்போக்குவரவுக்கு வசதியேற்படுமாம்.

* * *

செயற்கைப் பூமிநடுக்கம் :

கடந்தமார்கழியில் பூமிக்கடியில் 130 அடி ஆழத்தில் 1,000தொன் வெடிமருந்தைவெடிக்கச்செய்து ஒருசெயற்கைப்பூமிநடுக்கத்தைச் செய்துள்ளார்கள்.

* * *

இன்று மின்சாரத்தினாலும், நீராவியினாலும் புகைவண்டிகள் இயக்கப்படுகின்றன. ஆனால், அப்படிப்பட்ட தீயறைகள், உலைகள் இன்றி—நெருப்பின்றி நீராவியால் இயங்கும் இயந்திரங்களை ருஷியாவிலுள்ள ஜெர்லின்ஸ்கி தொழிற்சாலை செய்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தோன்றிய லூர்துநாயகி

—: செல்வன் :—

நமது ஆண்டவராகிய யேசுக் கிறீஸ்துநாதர் இவ்வுலகத்தில் இருந்தபோது எண்ணிறந்த அற்புதங்களால்தாம் தேவசுதன் என்று ஒப்பித்தார். நமது ஆண்டவளாகிய அவருடைய தாயாரும் பரலோகத்தில் இருந்துகொண்டு எண்ணற்ற காட்சிகளால் தாம் மனுக்குலத்தின் மாதா என்பதை எண்பித்துவருகிறாள். ஆகா! எத்தனை அருள் வாக்குகள்! எத்தனை புதுமைகள்!

அன்றொருநாள் புனிதர் டோமினிக்கருக்குத் தோன்றி தூயமணிமாலையாம் செபமாலையை அளித்துச் சென்றாள். வேறொருநாள் புனிதர் சைமன் ஸ்ரொக்குக்குக் கார்மேல் மலையில்காட்சியளித்துத் தூயஉடையாம் உத்தரியம் உடுத்திமறைந்தாள். பாத்திமாகிரியில் பன்முறை தோன்றி, 'செபம், தபம் என்று வற்புறுத்தி வந்தாள். இப்படியே அடுக்கிக்கொண்டே போகலாம். ஏன்? அவளுடைய கருணைநிறை காரணப் பெயர்கள்தான் எத்தனை! செபமாலைமாதா — உத்தரியமாதா பாத்திமாமாதா — சதாசகாயமாதா — அடைக்கலமாதா — பனிமயமாதா — லூர்துமாதா என்றெல்லாம் வரையற்ற நாமதேயங்கள்......

இன்று லூர்துமாதா என்னும்போது, நூறுவருடத்துக்குமுன் 1858-ம்ஆண்டு மாசித்திங்கள் 11-ம் நாள் மசபியேல்குகையில் மகிமையுறு கன்னியாய்க்காட்சிதந்த என்றும் மறக்கமுடியாத நிகழ்ச்சியையே நம்மனக்கண்முன் காண்கிறோம். பெத்தலேம் மலைக்குகையில் கர்த்தர் பிறந்தார். அவரின் இரட்சணியம் அங்குதான் ஆரம்பமானால், மசபியேல்குகையில் மாதாகாட்சிதந்த அவளின் கருணைமழை அங்குதான் அருட்பிரவாகத்தைத் திறந்ததுஎன்னலாம்.

என்ன ஆச்சரியம்! கன்னிமையும் கருணையும் உருவெடுத்தவளாய், பிரபைகாலும் வெண்ணிற அங்கி அணிந்தவளாய், தூயவெண்துகிலால் முக்காடிட்டவளாய், நீலநிற இடைக்கச்சைக் கொண்டவளாய் காட்சியளித்தாள். அழகியஉரோசாப்பூக்கள் அவளின் தூயபாதங்களின் பாதப்படியாக இலங்கின; பத்திநிறை' பெர்னதேத் என்னும் பதினான்குவயதுச் சிறுமிக்கேகாட்சிதரச் சித்தமானாள். இரண்டாம் முறை காட்சியளித்தவேளை பெர்னதேத்குகைக்கு ஆசிநீர் தெளித்ததைக்கண்டு மாதாபுன்னகை புரிந்தாள். அடுத்தமுறை எழுத்துமூலம் கேட்டபோதும் தெய்வீகத்தாயர் புன்னகை கொண்டாளாயினும் மேலும் பதினைந்துமுறை தம்மைச் சந்திக்கவேண்டுமென்று கேட்டு மறைந்தருளினாள். கடைசியாகப் பங்குனிமாதம் 25-ந்திகதி கபிரியேல் சம்மனசானவர் தமக்கு மங்களம் சொன்னஞாபகத்தினத்தன்று பதினெட்டாவது முறையாகக் காட்சிகொடுத்து 'அமலஉற்பவம் நாமே' என்று அறிக்கையிட்டு ஏகினாள். உண்மைக்காட்சியின் தோற்றம் எம்மை இன்றும் மயக்குகின்றதே!

இக்காட்சிகள் எல்லாம் 9-ம்பத்திநாத பாப்பரசர் பரிசுத்த கன்னிமரியாய் 'மாசில்லாமல் உற்பவித்தவள்' என்றசத்தியத்தை உலகுக்கு உறுதிப்படுத்தி மகிமைமுடிசூட்டி ஒருநான்கு வருடங்கள் முடியாமுன்னரே அழியாச்சாட்சியாகப் பரலோகத்திலிருந்து கிடைத்தனவே. தாயார் காட்சியளித்த நூறுவதுவருடவிழாவை, 1958-ம்ஆண்டு கொண்டிலங்குகிறது. 1955-ம்ஆண்டும் மாதாவின் புனிதவருடமாகத் திகழ்ந்தது. எங்கள் தலைமுறை மாசில்லாதேவதாயின் தலைமுறைபோலக் கிடைத்தது எம்மூதாதையர் எவருக்குமே கிட்டாத பெரும்பாக்கியமென்போம்.

எனவே, நூறுவருடங்களின்முன் மாதா கேட்டவற்றை நம்நாட்களில் நினைவுகொள்வதே யோக்கியமாகும். தேவதாயார் தம்காட்சியில் தூயவெண்ஆடை — கூப்பியகரம் — வானத்தை ஏறெடுத்தகண் — புன்னகைபூத்தமுகம் கொண்டிலங்கினாளே. அத்தாயாரின் மக்களாகிய நமக்கும் இக்காலம் வேண்டுவதும் அந்நிலையே. 'அகத்தின்அழகு முகத்திற் தெரியும்' என்பது தமிழர் முடிபு. நமது அகமும் கள்ளங்கபடமற்று, வெண்பனிக்கட்டிபோல் தூயநிலையில் ஆகவேண்டும். இஷ்டப்பிரசாததூயவெண்ஆடையை அணியவேண்டும். அப்போதே நமது முகமும் நம்பரலோக அன்னையின் சாயலைப் பிரதிபிம்பிக்கும். மேலும், கடவுளைவணங்கும்கரமும், அவரையே நோக்கும் கண்ணுமாய் இருப்போமாயின் மாதாவின்மக்களாய் வாழ்ந்து மாதாவண்டைசேர்வோம்.

ஒன்பதாம்காட்சியில்தேவதாயார் பெர்னதேத்தைக் கெபிக்கருகிலுள்ள நீரூற்றில் பருகும்படி கட்டளையிட்டாள். பெர்னதேத்தன்வெறுங்கையால் தரையைத்தோண்டினாள். என்னஅற்புதம்! தண்ணீர் குபீர் என்று வந்தது. கடந்த ஒருநூறு ஆண்டாக இந்தநீரில்குளித்து அதில் குணமடைந்த நோயாளிகள் தொகைக்குக் கணக்கேயில்லை. அன்றுதொட்டு இன்றுவரை அந்த அபூர்வ நீரூற்று வற்றியதே கிடையாது.

லூர்துமாதா மசபியேல்குகையில் உரைத்தவை யாவை? "என்னிடம் மேலும் பதினைந்துநாட்களுக்கு வருவாயாக" என, பெர்னதேத்தும் "ஆம்"என்று பணிந்தாள். மாதா அதற்கு ஈடாக யாதுஅளித்தாள்? இவ்வுலகத்தில் நீ சந்தோஷத்தை அனுபவியாது மறுவுலகத்திலேயே இன்பத்தை யடைவாய் என்றாள். பதினொராவது காட்சியில் யாது விழைந்தாள்? "மகளே! குருமாரிடம்சென்று இவ்விடத்தில் ஒரு கோவில்கட்டும்படிசொல்" என்றாள். கடைசிக்காட்சியில் பெர்னதேத் மிசத்தாழ்மையாகக் கெஞ்சிக்கேட்டபோது; "தேவதாயார் மிகவும் பக்தியுருக்கத்தோடும், தேவகிருபையை நோக்கியவண்ணமும் "அமலஉற்பவம் நாமே" என்றிசைத்தாள். ஆ! பெர்னதேத்தின் பாக்கியந்தான் என்னே! மாதாவைப் பதினெட்டு முறை தன்ஊனக்கண்களால் கண்டுகொண்டாள். மாதாவின் மதுரமான குரல்ஓசையைக் காதாரக்கேட்டாள். அன்றடைந்த இன்பத்தில் மூழ்கியவள் பிறர்சிநேககன்னியர் சபையிற்சேர்ந்து, கடைசியாக அருள்நிறைமந்திரத்தின் பிற்பாதியை உச்சரித்தவண்ணம் திருச்சிலுவையை ஏந்தியவாறு உயிர்துறந்தாள். நேவேஸ்என்னும் நகரில் அவள்மடத்தில் அவளது அழியாஉடல் பூமதானம் செய்யப்பட்டிருக்கிறது.

லூர்துகெபி இன்று மூன்றடுக்கு ஆலயமாகக் காட்சியளிக்கிறது. மாதாவின் நீரூற்று வற்றாத அருவியாய் அருள்சுரந்து எவரையும் வரவேற்கிறது. மாதாவின்மகிமையை மதிப்பிடமண்ணிலுள்ளாரால்இயலுந்தரமோ! இன்றுலூர்துகெபி பாரிலுள்ளோரின் பரகதியாய், யாத்திரிகர்களின் கடைசிக்கதியாய்க்காட்சியளிக்கிறது. "மரியாயின் நடத்தை" என்னும் ஆபாசநூலுக்குச் சம்மட்டியாய்த் திகழுகின்றது. கோடிக்கணக்கானோர் யாத்திரைசெல்கின்றனர். இந்தவிழா எம்வாழ்வின்பெருவிழா. நாமும் நம்மனத்தின் பாவக்குகையை அழித்துப் பரலோகத்தாயாருக்கேற்ற அழகியஆலயம்ஒன்றை அமைப்போமாக. வாழ்வுக்குப் புத்துயிர் அளிப்போமாக!

லூர்துபதியின் முதற் புதுமை

"பெர்னதெத்தின் கீதம்" என்றநாமத்துடன் வெளியான உலகப்பிரசித்திபெற்றநூலை இயற்றினவராகிய 'பிரான்ஸ் வேர்வெல்' என்றயூதபண்டிதர் லூர்துபதியில் தேவதாயார் காட்சியளித்த பின்பு முதன்முதலாக நிகழ்ந்த அற்புதசம்பவத்தை அந்த நூலிலே வெளியிட்டிருக்கிறார். அது பின்வருமாறு:

"புகுஹோட்ஸ்" என்னும் பிரான்சியமாது சின்னஞ்சிறியதும், நோஞ்சியுமான ஓர் ஆண் குழந்தைக்குத் தாயாயிருந்தாள். அந்தக்குழந்தை பிறந்தநாள்தொடக்கமே நோய்கொண்டதாய் அடிக்கடி தனக்குண்டான வலிப்பிணியினால் இடைவிடாது வருந்தியது. அக்குழந்தைக்கு 2 வயது நடக்கும்பொழுது வியாதிமுன்னிலும் அதிகம் கடுமையாகி இன்றைக்கோ நாளைக்கோ அக்குழந்தை இறந்துவிடுமென்று சொல்லும் நிலைமையிலிருந்தது. குழந்தை தொட்டிலிலே கிடந்து திக்குமுக்காடி அடிக்கடி மூச்சுவிட்டுக்கொண்டும், காய்ச்சல் நெருப்பாய்க் கணகணென்று காய்ந்துகொண்டுமிருந்தது. வலியினால் பரிதாபத்துக்குரியவிதமாய் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தது. தாங்கொணாத்துக்கத்துடன் பிள்ளையின்தாய் பக்கத்தில்நின்றாள். அவள் அருகில்நின்ற தகப்பனும் அதேவித வியாகுலம் நிறைந்தவனாய்இருந்தாலும் இப்படிவேதனை அனுபவிப்பதைப் பார்க்கிலும் பிள்ளை சீக்கிரம் இறந்துவிட்டால் அந்தக் கண்ணாருவி ஒழிந்துவிடுமேயென்று ஒருவகையிலே ஆறுதலடைந்தான்.

"டக்றர் டூசு அல்லது பெரியூஸ் பட்டணத்தில்இருப்பார்கள்; இருவரில் ஒருவராவது வருவார்கள்; அவர்களைக் கூட்டிவாரும்" என்று தாய்தன்கணவனைக் கெஞ்சிக்கேட்டாள். பிள்ளையின் பிதா அதற்குச் சம்மதமில்லாதவர்போல், டக்றர்மாரில் ஒருவர் இங்கேஇல்லை; மற்றவர் இந்தநேரத்தில் வரமாட்டார்; அல்லாமலும் குழந்தை தப்பாது; இனிமருந்து கொடுப்பதில்ஒருபிரயோசனமும் இல்லையென்று சும்மாஇருந்துவிட்டார். அருகில்நின்றசிலர் தாய்க்கு ஆறுதல்சொல்லி, "உனது பிள்ளை ஞானஸ்நானம்பெற்ற குழந்தை; அது நேரே மோட்சம் செல்லும்; அதுஅங்கு ஒருசம்மனசாகஇருக்கும்" என்றுசொல்லித் தேற்றப்பார்த்தார்கள். ஆனால், தாயோ என்னைப் பரலோகத்தில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சம்மனசு ஒருவரைப்பற்றி எனக்கு இப்போது கவலையில்லை; எனது குழந்தை பிழைத்து என்னோடு உயிர்வாழ வேண்டுமென்பதே எனது அவாவென்று மனசுக்குள் சொல்லிக்கொண்டு, தொட்டிலில் தனதுமுகத்தைச் சரித்துவைத்துக்கொண்டு சிறிதுநேரம் ஒன்றும்பேசாது இருந்துவிட்டாள்.

சற்றுநேரத்தால் அவள் பரபரவென்று எழுந்து, ஒருதுணியை இழுஞ்சியெடுத்து அதனாற் தன் பிள்ளையைப் போர்த்துமூடிக்கொண்டு பெர்னதெத் காட்சிகண்டஇடத்தில் அற்புதமாகப் பெருக்கெடுத்த நீரோட்டத்தை நோக்கி வாயுவேகம் மனோவேகமாக ஓடிப்போனாள். துக்கமிகுதியினால் அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென எண்ணிப் புருஷனும், இன்னும்சிலரும் அவளைப்பின்தொடர்ந்து உரத்துக் கூவிநிற்கும்படிகேட்டபோதிலும் அவள் எவருக்காவது செவிகொடுத்தவளல்ல. அக்கினிச்சுவாலைபோலக் காய்ச்சல் காய்ந்துகொண்டிருந்த குழந்தையை இவ்வித கடுங்குளிருள்ளே வெளியிற் கொண்டுபோதல் எவ்வளவுபைத்தியமானசெயல்; இனிக்குழந்தை பிழைக்கமாட்டாதென எல்லோரும் முடிவுகட்டிப்போட்டார்கள். ஆனால், அவளோ அக்குழந்தையை அற்புதநீரோட்டத்தில் கால்மணிநேரமட்டாய் அமுக்கிக் குளிப்பாட்டுவதை அவர்கள்கண்டதும் குழந்தையை அவள்பிரேதமாகவன்றி ஒருபோதும் உயிருடன் வீடுகொண்டுசெல்லவேமாட்டாளென்று சொன்னார்கள்.

தாயோ குழந்தையை வீட்டுக்குக் கொண்டுவந்து நன்றாகப் போர்த்துமூடித் தொட்டிலுள் வளர்த்திவிட்டாள். டக்றர் குழந்தையின்பாடு என்னவாயிற்றென்பதை அறிவதற்கு வீட்டுக்குவந்தபொழுது, "என்னுடைய பிள்ளை நித்திரை செய்கிறது; ஒருவரும் குழந்தையை எழுப்பவேண்டாம்" என்றுசொல்லிவிட்டுத் தன் அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டாள். குழந்தை அன்று பகல்முழுவதும் இராமுழுவதும் நன்றாக நித்திரைசெய்தது. விடிய அதற்குநல்லபசிஉண்டாகித் தாய் கொடுத்த இரண்டுகோப்பை பாலையும் ஒருசொட்டும் மிச்சம் விடாது பருகினது. மீண்டும் அது நித்திரைசெய்யும்படி விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுத் தாய் தண்ணீர்மொள்ளப் போய் மீண்டுவந்து பார்த்தபொழுது, முன்னொருபோதும் எழுந்திருக்க அறியாத அப்பிள்ளை அன்றைக்குஎழுந்து தொட்டிலுக்குள்ளே சம்மாணங்கொட்டிக்கொண்டிருப்பதைக் கண்டதே ஆனந்தக்கூச்சலிட வாயுன்னினாள். ஆனால், ஆனந்தமேலீட்டினால் அவள்ஒன்றுமே பேசமுடியாமல் போயிற்று. சுகப்பட்டகுழந்தையோ பெரிய வெற்றிவீரனைப்போலத் தொட்டிலுள்இருந்துகொண்டு தாயைநோக்கிப் பெருவாய் பெருஞ்சத்தமாய்க் களகளவென்று சிரிக்கத் தொடங்கினான். அதன்பின் அவன் பூரணசுகமுடையவனாகப் பெரும்விருத்தாப்பியனாகுமட்டும் சீவித்திருந்தான். சிலவருடங்களின்முன் பேர்னதெத்அம்மாளுக்கு றோமாபுரியில் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டிய பொழுது லூர்துபதியில் முதன்முதல் அற்புதவரம்பெற்ற அவன் 77 வயதுள்ள விருத்தாப்பியனாக லூர்துமாதாவின் அற்புதங்களுக்குச் சாட்சிசொல்ல றோமாபுரிக்குச் சென்றிருந்தான்.

பாப்பரசர்தினம்

கொழும்பு அதிமேற்றிராசனத்தில் பரிசுத்த பாப்பரசர்தினக் கொண்டாட்டங்கள், ஆங்கிலப்பகுதி சஞ்சூசையப்பர் கல்லூரியிலும், சிங்களப்பகுதி சந்தலூசியா அதிமேற்றிராசன சதுக்கத்திலும், தமிழ்ப்பகுதி, கொட்டாஞ்சேனை ஜெம்பட்டாவீதியிலுள்ள றட்னம்மைதானத்திலும் வருகிறஞாயிறு 2-ந்திகதி கொண்டாடப்படும்.

உரோமஇராச்சிய பூபதியே........

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றுவோம். தேவதாயாரின் திருப்பக்தியை வளர்ப்போம். யேசுவின் பிரமாணிக்கமுள்ள போர்வீரராய்த் தொண்டாற்றுவோம். எங்கள் பரிசுத்த தந்தையின் கருமங்கள்யாவும் வெற்றியடைய ஒன்றுகூடித் திடமனதோடு ஒத்துழைப்போம். அவரது சத்துருக்களை முறியடிப்போம். அவரது ஞானக் காந்தியொளிகாலும் உருவப்படங்களை எங்கள் இல்லங்களில் பிரசித்தமாய்த் தொங்கவைத்துத் துலங்கச்செய்வோம்.

பார்புகழும்
12-ம் பத்திநாதபாப்பரசர்
நீடூழி வாழ்க!

கல்லாற்றுக் கடிதம்

அர்ச். லூர்துநாயகியின் நூற்றாண்டுவிழா: கல்லாறு, அர்ச். அருளானந்தர்கோவிலைச்சேர்ந்தகிறீஸ்துவர்கள் அர்ச். லூர்துநாயகியின் நூற்றாண்டுவிழாவைச் சென்ற 15-ந்திகதி சனிக்கிழமை மிகவிமரிசையாகக் கொண்டாடினர். ஆயத்ததினமாக, அதற்குமுந்திய இருநாட்களில் செபமாலை, பிரார்த்தனையின்பின் லூர்துதாயின் மகிமையைப்பற்றிச் சுவைமிக்க பிரசங்கத்துடன் பங்குக்குருவர் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளிவந்தார். சனிக்கிழமைகாலை நிறைவேறிய பாடற்பூசைக்குத் திரளான மக்கள் குழுமியிருந்தனர். அன்றுமாலை 6 மணிக்குச் செபமாலை, பிரார்த்தனையின்பின் பங்குக்குருவர் பிரசங்கத்துடன், வேஸ்பர் பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளினர். அதன்மேல் பக்தர்கள் நிரைநிரையாகப் பக்திப்பாடல்களைப் பாடியவண்ணம் அலங்கரிக்கப்பட்ட கோவில்வீதிவழியாகச்செல்ல, அர்ச். லூர்துதாயின் திருச்சுரூபம் கோவிலைச் சுற்றிச் சுற்றுப்பிரகாரமாக எடுத்துச் செல்லப்பட்டது. சுற்றுப்பிரகாரமுடிவில் திருச்சுரூபம் ஆலயத்தைஅடைந்ததும் விழா இனிதே முடிவுற்றது.

— நிருபர்

மட்டக்களப்பு

தாண்டவன்வெளித் தபால்

பரிசுத்த லூர்துமாதாவின் நூற்றாண்டு விழா: அகில உலக திருச்சபைத் தாபனங்கள் இன்று மிகவும் பரக்கக் கொண்டாடிவருவது, லூர்துபதியிலே அமல உற்பவ நாயகி காட்சியளித்த நூற்றாண்டுவிழாவேயாகும். இவ்விழா எமது விசாரணைப் பங்குத் தேவாலயத்தில் பக்தியருட்சிக் குரியவிதமாகச் சென்ற 16-2-58 ஞாயிறுவாரம் கொண்டாடப் படலாயிற்று.

விழாவின் ஆரம்பநிகழ்ச்சியாக மாதாவின் வர்ணக்கொடியானது பங்குக்குருவரால் ஏற்றிவைக்கப்பட்டது. முந்திய மூத்தினங்களிலும் திவ்விய நற்கருணை எழுந்தேற்றம்பண்ணிவைத்துச் செபமாலை, பிரார்த்தனை, பிரசங்கத்தின்பின் ஆசீர்வாதம் அருளப்பட்டு வந்தது.

16-ந் திகதி ஞாயிறன்று முதலாம் பூசை காலை 5-30 மணிக்குப் பங்குக்குருவராலும், இரண்டாம்பூசை பாட்டுப்பூசையாகக் காலை 7 மணிக்கு வண. எல். அல்பக்கூக் சுவாமியவர்களாலும், 7-30 மணிக்கு ஆயித்தியமலை, சதாசகாயநாயகி ஆலயத்தில் வழமைப் பூசையாகப் பங்குக்குருவராலும் நிறைவேறின. மூன்றுபூசைகளின்போதும் திரளானமக்கள் திருவிருந்தருந்தினர்கள்.

பிற்பகல் 6-30 மணியளவில் ஒன்றுகூடினர் மாதாவின்பக்தர்கள், பங்குக் கிறீஸ்தவர்கள். தேவாலய முகப்பின் மீது நெடுங்காலமாக நிறுவியிருந்து பழுதடைந்த திருச்சிலுவையினிடமாகப் புதிதாய்ச் செய்யப்பட்ட திருச்சிலுவைஒன்று லூர்துபதி நூற்றாண்டு விழாஞாபகசின்னமாய் மின்சாரவெளிச்சங்களிடையே அழகாகவும், நிரந்தரமாகவும் காட்சியளிக்கும்படி நிறுவப்பெற்றது. பின்னர் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ் செய்துவைத்துச் செபமாலை, பிரார்த்தனையின்பின் பங்குக்குருவரால் "நாமே அமலஉற்பவம்" எனத் திருவாய்மலர்ந்து காட்சிதந்த லூர்துதாயின் காட்சிவரலாறுகளை விளக்கிச் சிறந்ததோர் பிரசங்கஞ்செய்யப்பெற்றுத் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது.

அதன்மேல் திருச்சிலுவை முன்செல்ல, பாடசாலைப்பிள்ளைகளும், பங்குக் கிறீஸ்தவர்களும் மெழுகுவர்த்தித் தீபங்கள் ஏந்திச் செபமாலையுடனும், பாடல்களுடனும் அணியணியாகச் செல்ல, இயற்கை றோசாமலர்களிடையே அலங்கரிக்கப்பெற்றிருந்த லூர்துநாயகியின் திருச்சுரூபத்தை மாசில்லாத மாதாசபைப பெண்மணிகள் தாங்கி ஆலயவீதிவழியே செல்லச் சுற்றுப்பிரகாரம் சிறப்பாக நடந்தது. திருச்சுரூபம் ஆலயத்துள் வந்துசேர்ந்ததும் மணிகள்ஆர்ப்பரிக்க, வெடிகள் சப்திக்கத் திருச்சுரூப ஆசீர்வாதம் அருளப்பட்டு விழாவைபவம் இனிதே முடிபெய்தியது.

விகடத் துணுக்கு

தகப்பன்: (பையனைப்பார்த்து) இவ்வளவுநேரமும் எங்கே ஊர்சுற்றப் போயிருந்தாய்?

பையன்: பக்கத்துவீட்டிலே றேடியோ கேட்கப் போயிருந்தேன்.

தகப்பன்: (கோபத்துடன்) ஏண்டா நாங்களோ ஏழை. நீ ஏன் அவங்களிடம் இருக்கிற றேடியோவைக் கேட்டாய். நமக்கு அவங்க சும்மா கொடுப்பாங்களா?

EDUCATIONAL

Pitman-qualified Stenographer will take in girl - students for tuition in Shorthand and Type-writing. If desired, they will be prepared for the Pitman's Shorthand Typist Certificate, the London Chamber of Commerce, Complete or Part Higher Certificate for Short-hand Typists, G. C. E. Ord. Level, Adv. Level and other examinations.

N. B. Those who do not possess their own Type-writers will be allowed to practise at our machines between 9 and 11 a. m. and 3 to 4 p. m. paying a fee of Rs. 5/- per half-hour. Sufficient machines are available for beginners and for advanced students. Time need not be wasted in waiting for turns.

Apply in person to :—

(Miss) M. M. Thuraisingham,
20, Third Cross Street,
Jaffna.

இந்தமங்கை யார்?

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

மானபார்வை அவளது சிற்றின்பவாழ்க்கைக்குச் சாமணி அடிக்கின்றது. அப்பார்வையைஅன்பின் காந்தசக்தி என்று சொல்வதா? அருளின் காந்தசக்தி என்பதா? அல்லது இரண்டுசக்தியும் இணைந்ததென்பதா? அச்சக்தியாலே மதலேனாள் அவர்பால் கவர்ந்திழுக்கப்படுகின்றாள். அவரைவிட்டுப்போவது அவளுக்குக் கஷ்டமாகின்றது. அதனால் எங்கெங்கும் அவரைப் பின்சென்று அவர்போதனையைக் கேட்பதிலே காலம்போக்குகிறாள். அங்ஙனமாக, விபசாரத்தில் பிடிபட்டஓர்ஸ்திரீயைப் பரிசேயர்கள் அவரிடத்தில் கொண்டுவந்து, அவளைக் கல்லால்எறிந்து கொல்லவேண்டுமென்று மோயீசனின் வேதப்பிரமாணத்தை எடுத்துக்காட்டுகின்றனர். அவர் நிமிர்ந்துபார்த்து அவர்களை நோக்கி: "உங்களுக்குள்ளே பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவா"னென்று திருவுளம்பற்றுகின்றார். அவர்கள் இதைக்கேட்டு ஒருவர்பின்ஒருவராய் அப்பாலே போகின்றனர். அப்போதுயேசுநாதர் ஸ்திரீயே! உன்பேரில் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவரும் உனக்கு ஆக்கினைத் தீர்வை இடவில்லையோ என்கிறார். ஒருவனும் ஆக்கினைத் தீர்வை இடவில்லையென்று அவளும்உரைக்கிறாள். அப்பொழுது யேசுநாதர் இரக்கத்துடன் அவளை நோக்கி: "நானும் உனக்கு ஆக்கினைத்தீர்வை இடவில்லை; போ, இனிப்பாவஞ் செய்யாதே" என்று உருக்கமாக வசனிக்கின்றார்.

(வளரும்)

எமதுதிடனின் உற்பத்தி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொஞ்சத்தூரம் நடந்தபின் களைப்புற்றுக் கீழேஉட்கார்ந்து நித்திரையாகிவிட்டார். பின்பு தேவனால் அனுப்பப்பட்ட தூதனானவர் பரலோகத்திலிருந்து கொண்டுவந்து கொடுத்தறொட்டியை உட்கொண்டபின்பே உற்சாகத்துடன் திரும்பவும் நடக்க ஆரம்பித்தார். இப்படி இன்னும் இரண்டு தடவைகள் களைப்படைந்து தேவதூதன் கொண்டுவந்துகொடுத்த றொட்டியின் உதவியாலேயே கடவுளின் ஹொரப் மலைக்குத் தப்பிச்செல்ல முடிந்தது. இந்த அற்புதமான றொட்டி ஒருவிதத்தில் நற்கருணையே தான்.

இளம் தாய்மார்களான அர்ச். பேர்பெச்சுவாவும், அர்ச். வெலிசிட்டாவும் வேதசாட்சியானார்களே! இவர்களுக்கு மனோதிடம் எங்கிருந்து வந்தது? நிச்சயமாகத் திவ்விய சற்பிரசாதத்திலிருந்துதான் கிடைத்தது. பலிஅரங்கத்தில் வனவிலங்குகளிடையே இவர்கள் விடப்பட்ட சமயம் ஒருவரைஒருவர் உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார்களாம்.

அர்ச்சியசிட்டர்களுக்குச் செய்த உதவிகளைப் பரிசுத்த நற்கருணை எங்களுக்கும் செய்யாமற் போகாது. நாங்கள் பாவச்சோதனைகளை எதிர்ப்பதற்குத் திடன்தருவது நற்கருணையே! உலகமும், சரீரமும் எங்களை எதிர்க்கும்போது சோர்வடைந்துவிடாமல் யுத்தம்செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது திவ்விய சற்பிரசாதத்தின் மூலம் கிறீஸ்துநாதரை எங்கள் இதயபீடங்களில் வைத்துக்கொள்வது தான் அந்தவழி!

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 238 T

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

யாழ்ப்பாணம், பெரியதெரு
காலஞ்சென்ற
அந்தோனிப்பிள்ளை மிக்கேல்பிள்ளையின்
ஆதனத்தின் பேரில்
யாழ்ப்பாணம், பெரியதெரு
அந்தோனிப்பிள்ளை மிக்கேல்பிள்ளை
கைம்பெண் எலிசபேத்

— தத்துவகாரி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 238 T இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1958-ம் ஆண்டு பங்குனிமாதம் 29-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

காணிவிபரம்

யாழ்ப்பாணம், பெரியதெருவில்இருக்கும் 'மங்கைபாகர் வளவு' என்னும்காணி பர. நில. இலா. 2 குளி 10-உம். இதில் பிரிக்கப்பட்ட பர. நில. இலா. 1 குளி 5-உம், கல்வீடும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — சங்கரப்பிள்ளை மனுவல்பிள்ளைக்கும், பெண் இராசம்மாவுக்குமுரிய ஆதனம். வடக்கு — பெரியதெரு. மேற்கும், தெற்கும் — சின்னையாவின் உரிமைக்காரரின் ஆதனங்கள் இதடங்கலும்.

இக்காணி சங். கன்னியாஸ்திரிமார் மடத்துக்கு எதிரேஉள்ளது.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்,
பதிப்பாளர்,
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 25-2-58

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, February 27-1958.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org